பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 7 | இதழ் 14 | மார்ச் 26 1969 | பக்கங்கள் 8 | விலை சதம் 10

**மா சே - துங் சிந்தனை**

வர்க்க சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் உறுப்பினராகவே வாழ்கின்றனர்; ஒவ்வொரு சிந்தனையிலும் விதிவிலக்கின்றி ஒரு வர்க்கத்தின் முத்திரை குத்தப்பட்டிருக்கின்றது.

★

# ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

**கைத்தொழில் நீதி மன்றங்கள், சம்பள நிர்ணய சபைகள் ஏனைய மத்தியஸ்த சபைகள் போன்றவை தொழிலாளர் வர்க்கத்தின் வர்க்க உணர்வையும் போராட்டத் தன்மையையும் மழுங்கடிப்பதற்காக முதலாளித்துவ வர்க்கத்தினாலும் அதனது அரசு இயந்திரத்தினாலும் ஏற்படுத்தப்பட்ட சூழ்ச்சி என இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் இம்மாதம் 23ம் திகதி கொழும்பு டிமெல் பார்க்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.**

இம் மாபெரும் பொதுக் கூட்டம் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் அங்கத்தவர்களினால் தமது சம்பளவுயர்வு கோரிக்கையை மீண்டும் வற்புறுத்துவதற்காகவும், கைத்தொழில் நீதி மன்றம் சம்பளவுயர்வு கோரிக்கையை நிராகரித்ததை எதிர்ப்பதற்காகவும் நடத்தப்பட்டது. இப் பொதுக் கூட்டத்திற்கு முன் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் இரு மணித்தியாளம் அடையாள வேலை நிறுத்தம் செய்து, கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் நடத்தினார்கள்.

## அடையாள வேலை நிறுத்தம் பூரண வெற்றி

23ம் திகதி நடைபெற்ற இந்த அடையாள வேலை நிறுத்தத்தில் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைமையில் திரண்டுள்ள ஒரு லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் நாடு பூராவும் கலந்து கொண்டார்கள். கொழும்பு நகரத்தைச் சுற்றியுள்ள தொழிற் சாலைகளிலும், தொழில் நிறுவனங்களிலும் வேலை செய்யும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பிற்பகல் 2½ மணிக்கு தொழிற் சாலைகளை விட்டு வெளியேறி அடையாள வேலை நிறுத்தத்தில் குதித்தார்கள். மலைநாடு மற்றும் பிரதேசங்களிலுள்ள தோட்டப் பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரமாயிரமாய் முழு நாளும் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

தோழர் சண்முகதாசன் தொடர்ந்து பேசுகையில், தொழிலாளர் வர்க்கம் தமது ஐக்கியத்திலும், தமது ஸ்தாபன பலத்திலும், போராட்ட சக்தியிலும் நம்பிக்கை வைக்குமாறு தொழிலாளர் வர்க்கத்திற்குப் புகட்டுவதற்குப் பதிலாக மேற்கூறிய நிறுவனங்கள், கைத் தொழில் நீதி மன்றங்களிலும், ஏனைய சபைகளிலும் திறமையாக வாதிடக் கூடிய வழக்கறிஞர்கள், தொழிற் சங்கத் தலைவர்கள் ஆகியோர் மீது தொழிலாளர் வர்க்கம் நம்பிக்கை கொள்ளச் செய்வதற்கு முயற்சிக்கின்றன. முதலாளி வர்க்கம் தமது நலன்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு ஆயிரக் கணக்கில் பணம் கறக்கும் சட்ட ஆலோசகர்களின் உதவியுடன் இந்த நிறுவனங்களைப் பாவிக்கின்றது. இந் நிறுவனங்களிடமிருந்து தொழிலாளர்களுக்கு அத்திபூத்தாற் போல் தான் ஏதாவது சிறு சலுகை சில வேளைகளில் கிடைக்கும்.

சகல வேலை நிறுத்தங்களையும் கைத் தொழில் நீதி மன்றங்களுக்கு அல்லது அது போன்ற நிறுவனங்களுக்கு அதிகாரிகளின் நிர்ப்பந்தத்தின் மூலம் பாரப்படுத்தி வேலை நிறுத்தங்களை முடிவடையச் செய்வது தற்போது இலங்கையில் வழமையாகி விட்டது. தொழிலாளர் வர்க்கம் இன்று அது வீழ்ந்துள்ள அதளபாதாளத்திலிருந்து வெளியேற வேண்டுமேயானால் இக் கேடு விளைவிக்கும் முறை நிறுத்தப்பட வேண்டும். ஆகவே தான் 1968, ஜனவரியில் தனியார் துறையில் சம்பளவுயர்வு கோரி பல வாரங்களாக நடத்தப்பட்ட வேலை நிறுத்தத்தின் போது தொழில் அமைச்சர் முதலாளிகளுக்கு சார்பாக இவ் வேலை நிறுத்தத்தில் தலையிட்டு இத் தகராறை கைத் தொழில் நீதிமன்றத்திற்கு கட்டாய மத்தியஸ்தத்திற்குவிட்ட போது, அதன் பின்னர் அவ் வேலைநிறுத்தம் சட்ட விரோதமான போதிலும், இப் போராட்டத்தை தொடர்ந்து நடத்துமாறு தொழிலாளர்களுக்கு இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் அறைகூவல் விடுத்தது என்றார்.

மேலும் அவர், அரசாங்க அளவு யஞ்சப்படி கோரி 1958, ஏப்ரல்-மே மாதங்களில் ஐந்து வாரங்களாக நாம் நடத்திய சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தை தொழிலாளர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து தமது ஐக்கியத்திலும், பலத்திலும், போராட்ட சக்தியிலும் நம்பிக்கை வைக்குமாறும், கைத் தொழில் நீதி மன்றங்களில் நம்பிக்கை வைக்க வேண்டாம் என அவர்களை நாம் கேட்டுக் கொண்டோம். ஆனால் டாக்டர் என். எம். பெரேராவும், பீட்டர் கெனமனும் செய்தது என்ன? சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினால் ஏற்படக் கூடிய விளைவுகளைக் காட்டி தொழிலாளர்களைப் பயமுறுத்தி வேலைக்குத் திரும்புமாறு நிர்ப்பந்தித்தனர். அதன் மூலம் வேலை நிறுத்தத்தை இவர்கள் காட்டிக் கொடுத்தனர்.

21 கோரிக்கைகளுக்கான போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த தலைவர்களும் இவர்களே யாவர். 1966, ஜனவரி 8ம் திகதி நடந்த பிழையான, எது வித தயாரிப்பு மற்ற வகுப்பு வாத வேலை நிறுத்தத்தை நடத்தியவர்களும் இவர்களே யாவர். தனியார் துறையில் நடைபெற்ற போராட்டத்திற்கு முன்னர் ஐக்கியத்திற்காக நாம் விடுத்த அறைகூவலை நிராகரித்தவர்களும் இவர்களேயாவர். இப்போதாவது ஐக்கியமும். கூட்டுத் தலைமையும் ஏற்பட வேண்டுமென வேலை நிறுத்தம் ஆரம்பமானதும் நாம் விடுத்த அறைகூவலுக்கும் இவர்கள் செவிசாய்க்கவில்லை. அவர்களுக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே அவர்கள் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தனர். 1968, நவம்பர் — டிசம்பரில்

8-ம் பக்கம் பார்க்க



தீண்டாமை-சாதி அடக்குமுறைக்கு எதிராக ஊர்வலம் செல்லும் மக்களை பொலிஸ் தாக்குகிறது. இந்த ஓவியம், தீண்டாமை-சாதி அடக்குமுறையை ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கம் கொழும்பில் நடத்திய ஓவியக் கண்காட்சியில் இடம் பெற்றது.

# சாதி அடக்குமுறைக்கு எதிரான சித்திரக் கண்காட்சி

**சென்ற வாரம் 17, 18, 19ம் திகதிகளிலே கொழும்பு லயனல் வென்ட் கலா மண்டபத்தில் நடந்த சாதி வெறிக் கெதிரான சித்திரக் கண்காட்சி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கலை மக்களுக்காக, மக்களின் போராட்டங்களுக்காக எவ்வாறு பயன்பட முடியும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது இக் கண்காட்சி. மற்றெந்தச் சித்திரக் கண்காட்சிக்கும் செல்லாதளவு பெருந்திரளான மக்கள் இக் கண்காட்சியைப் பார்வையிட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.**

இவ்வாண்டு ஜனவரி மாதம் யாழ். நகர மண்டபத்தில் தியாகி இரத்தினம் அரங்கில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் இரண்டாவது மாநாட்டிற்கு தென்னிலங்கையிலிருந்து சென்றிருந்த தோழர்கள் அங்கு நடைபெற்ற சித்திரக் கண்காட்சியை சிங்கள மக்களும் பார்ப்பதற்கு சிங்கள பிரதேசங்களிலும் நடத்த வேண்டும் என்று ஒரு விசேஷ வேண்டுகோளை விடுத்தார்கள். அவ்வேண்டுகோளைப் பூர்த்தி செய்வதற்கும் தென்னிலங்கையில் தீண்டாமைக்கும் சாதி வெறிக் கெதிராகவும் பிரச்சாரம் செய்வதற்கு முதற்படியாகவும் இச் சித்திரக் கண்காட்சி கொழும்பு லயனல் வென்ட் கலா மண்டபத்தில், தீண்டாமையையும், சாதி அடக்குமுறையையும் ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கத்தின் கொழும்புக் கிளையால் ஒழுங்கு செய்யப்பட்டது.

நீண்டகாலம் இடதுசாரி இயக்கத்துடன் தொடர்புடையவரும் கலையில் மிகுந்த ஈடுபாடுடையவருமான செனட்டர் ரெஜி பெரேரா இச் சித்திரக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில், ''கலை கலைக்காக என்ற வரட்டுச் சித்தாந்தத்தை நிராகரித்து, சமுதாய மாற்றத்திற்கும் அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கும் கலைக்கு முக்கிய பங்குண்டென்பதை எடுத்துக் காட்டும் இக் கண் காட்சி தீண்டாமைக்கும் சாதி, அடக்குமுறைக்கும் எதிரான போராட்டம் வெற்றி பெறுவதற்கு நிச்சயம் உதவும்'' என்று கூறினார்.

இந்தக் கண்காட்சியைப் பார்த்தவர்களில் அநேகமானவர்கள் கேட்ட கேள்வி, ''இந்த ஓவியங்களை யார் வரைந்தார்கள்?'' 'ஒரு சில ஓவியங்களைத் தவிர மற்றெல்லா ஓவியங்களும் சாதி வெறிக்கெதிரான போராட்டத்திலீடுபட்டிருக்கும் மக்களாலேயே வரையப்பட்டன என்ற பதில் எல்லோரையும் ஒரு கணம் சிந்தனையிலாழ்த்தியது. கல்லூரிப் படிப்பிற்கே வசதியில்லாத மக்களிடமிருந்து கருத்தாழமும் கலையம்சமும் நிறைந்த ஓவியங்கள் எவ்வாறு பிறந்தன என்பது பலருக்கும் முதலில் புதிராகவே இருந்தது. ஆனால் இறுதியில், 'கலை போராட்டங்களின் வளர்ச்சிக்குதவுவது போல, போராட்டங்களும் கலையுணர்வுக்கும் கலையின் வளர்ச்சிக்கும் உதவுகின்றன,' என்ற உண்மையை எல்லோரும் ஏற்கத்தான் செய்தார்கள். ஒருவராலும் அறியப்படாது அடங்கிக் கிடந்த ஆற்றல்களையெல்லாம் வெளிக்கொணர்ந்தது போராட்டம் தானே!

காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஓவியங்கள், வடபகுதியில் நிலவும் தீண்டாமைப் பேயையும் சாதிச் சனியனையும், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடத்தப்படும் மனிதாபிமானமற்ற, மிருகத்தனமான, அநாகரிகமான அநீதிகளையும் அடக்குமுறைகளையும் அம்பலப்படுத்தியதோடு, தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வாறு போராட வேண்டுமென்பதையும் இறுதி வெற்றி அவர்களுடையதென்பதையும் கலையழகுடன் சித்தரித்தன. இந்த ஓவியங்களைப் பார்த்து உணர்ச்சி வசப்படாதவர்கள் இல்லையென்றே கூறலாம்.

'உயர்சாதியினரைப்' போல உடையணிந்திருந்த ஒரு தாழ்த்தப்பட்ட பெண்ணின் சட்டையை சாதி வெறியர்கள் பலாத்காரமாகக் கிழிப்பதைச் சித்தரிக்கும் ஓவியமொன்றைப் பார்த்த ஒரு பெண், ''சட்டை கிழிக்கப்படும் பெண் என்னென்ன உணர்ச்சிகளை அனுபவித்தாளோ, அவற்றை நானும் அனுபவிப்பதுபோல உணர்கிறேன்'' என்று வாய்விட்டுக் கூறினார்.

## நமது நிருபர்

இந்த சித்திரங்கள் ஜீவத்துடிப்புள்ளனவாய், உணர்ச்சிமிக்கதாய், பார்ப்பவர் உள்ளத்தின் ஆழத்தையே உலுக்கும் மனித ஜீவன்களாய்த் தோன்றின. தாழ்த்தப்பட்ட மக்களின் பொது எதிரிகள் நிலபிரபுத்துவம், சாதிவெறி, முதலாளித்துவம், பிற்போக்கு வர்க்கங்களின் ஆட்சியும் அதன் யந்திரங்களான அதிகார வர்க்கம், பொலிஸ் ஆகியன என்பதை தெள்ளத் தெளிவாய் எடுத்துக் காட்டும் உண்மையின் பிரதிபிம்பங்களாகக் காட்சி தந்தன.

கிணற்றில் நீர் அள்ளவந்த தாழ்த்தப்பட்ட பெண்ணைத் தாக்க ஓடிவரும் சாதிவெறியனை கையில் ஆயுதத்துடன் கண்கள் கனல்கக்க எதிர்த்து நிற்கும் வாலிபன்; தியாகி குமரேசு சாதி வெறியர்களுடன் கைகலப்பது; தாழ்த்தப்பட்ட மக்களை தாக்க வரும் பொலிசின் துப்பாக்கியைப் பறிப்பது; ஊர்வலம் செல்வது; ஆயுதம் தரிப்பது, ஆயுதம் தரித்து சங்கானை கிராமத்தை சாதிவெறியர்களின் பேயாட்டத்திலிருந்து பாதுகாப்பது போன்ற ஓவியங்களும், ''கொடுமையை எதிர்த்து நில்'' என்ற கோஷத்தை வாசிக்கும் குழந்தையின் ஓவியமும் பார்வையாளரிடையே புரட்சிகர உணர்வைத் தூண்டும் காந்த சக்தியாய்த் திகழ்ந்தன.

இந்தச் சித்திரக் கண்காட்சியையும், தீண்டாமையையும், சாதி அடக்குமுறையையும் ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கத்தின் கொழும்புக்கிளையால் செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடத்தப்பட்ட பிரமாண்டமான பொதுக் கூட்டத்தையும் ஒழுங்கு செய்வதற்கு முன், சிலர், இந் நிகழ்ச்சிகள் வடபகுதியை இழிவு படுத்தும் உணர்ச்சிகளைத் தூண்டி பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி, சாதி வெறியர்களின் கையை ஓங்கச் செய்து விடுமோவென்றும் ஐயப்பட்டனர். இந் நிகழ்ச்சிகள் வடபகுதியை இழிவு படுத்துவதற்குப் பதில் சிங்கள மக்களையும் விழிப்படையச் செய்துள்ளன.

சித்திரக் கண்காட்சி பற்றிய கருத்துக்கள் எழுதும் புத்தகத்தில் ஒரு சிங்கள பார்வையாளர் (பிரின்ஸ் இராஜசூரியா) பின் வருமாறு எழுதியுள்ளார்: ''வடக்கிலுள்ள நிலைமைகளை வெட்ட வெளிச்சமாக எடுத்துக் காட்டும் கண்காட்சி. இந்த நிலைமைகள் தெற்கிலும் இல்லாமலில்லை......'' பொதுக் கூட்டத்திலும் பேசிய பல சிங்களத் தலைவர்கள் ''வடக்கிலுள்ள தாழ்த்தப்பட்டவர்கள் போராடுவதைப்போல, அடக்கியொடுக்கப்பட்ட சிங்கள மக்களும் அடக்குமுறைக் கெதிராகப் போராட முன்வர வேண்டும்'' என்று பேசியதும் குறிப்பிடத்தக்கது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம். தீண்டாமையையும் சாதி அடக்குமுறையையும் ஒழிப்பதற்கான பரந்த தேசிய இயக்கமாக வளரும் அறிகுறிகள் தென்படுகின்றன என்றால் மிகையாகாது.

மொத்தத்தில் சித்திரக் கண்காட்சியும் பொதுக் கூட்டமும் எதிர்ப்பார்த்ததிற்கு மேலாக வெற்றியீட்டியுள்ளன.

ஓவியங்கள் காட்டிய போராராட்டப் பாதையைப் பார்த்த ஒருவருக்குக் கவிதை கூட உடனடியாகப் பிறந்து விட்டது. போராட்ட உணர்வுகூட ஆக்கக் கலையாற்றலை வளர்க்கிறது! சித்திரக் கண்காட்சி பற்றிய கருத்துக்கள் எழுதப்பட்ட புத்தகத்தில் எம். யூ. ஜவ்லா என்பவர் எழுதியிருந்த கவிதையை கீழே தருகிறோம்:

கற்பனை தெய்வமாம் கற்சிலை தெய்வத்தால் காரியம்
பலிக்காது!
அந்தக் கற்சிலை கும்பிடும் கயவர்கள் உள்ளத்தில்
கருணையும் இருக்காது!
அந்தக் கருணையில்லாதார் காட்டிய கல்வியில்
காரமே இருக்காது!
அந்தக் கல்வியை காத்திடும் காமுகர் உள்ளத்தில்
கடவுளே இருக்காது!
இந்த உண்மையை உணர்ந்தவர் உள்ளத்தில்
உண்மையில் மார்க்சிஸம் உருவாகும்!
அந்த மார்க்சிஸம் உணர்ந்தவர் உள்ளத்தில்
உயரிய லெனினிஸம் உருவாகும்!
அந்த லெனினிஸம் அருளிய மாவோ சிந்தனை வாழிய நீடூழி!
அதை ஈழத்தில் பரப்பிய சண்முகதாசனும் வாழிய நீடூழி!

# மாணவர் பேரணி அமைத்திடுவோம்!

மாணவர் யாவரும் விழித்திடுவோம்— பணமந்தைகளாட்சியை ஒழித்திடுவோம்
ஆணவம் கொண்டெமை அடக்கிடுவார்—அவர்
ஆட்சியை நாங்கள் உடைத்தெறிவோம்!

போரணி யொன்றினை அமைத்திடுவோம்—இங்கு
பொய்மைகள் யாவும் தவிர்த்திடுவோம்
வேரொடு தீமைகள் களைந்திடுவோம்—மத
வேழ மென நாம் இணைந்திடுவோம்!

பாரிஸ் நகரின் வீதிகளில்—நேற்றுப்
பாரைக் கலக்கிய வாலிபரின்
தீரம் நமதெனக் காட்டிடுவோம்—ஈழத்
தெருக்களில் எம்கொடி நாட்டிடுவோம்!

உலகைக் கலக்கிடும் மாணவர்கள்—அவர்
உறுதிக்கு நாம் இணை யானவர்கள்
கலகம் செய்வது பிழையென்பார்—எதிர்
காலம் சிறந்திட வழியென்போம்!

செங்கொடி தாங்கிய தொழிலாளர்—அணி
சென்றிடும் பாதைநம் வழியாகில்
இங்கெம திடர்கள் நிலைத்திடுமோ—சில
எத்தரின் வாழ்வும் செழித்திடுமோ?

சரித்திரம் படித்து அலுத்து விட்டோம்—புதுச்
சரித்திரம் படைத்திட விழித்து விட்டோம்
தரித்திரப் படுபவர் அரசமைப்போம்—எமைத்
தடுத்திட எழுபவர் சிரமறுப்போம்!

காலைக் கதிரின் சுடரொளிநாம்-வருங்
காலப் பணியினை இனிமறவோம்
நாளைய உலகம் நமதுலகம்—இதன்
நாற்றம் ஒழிப்பதும் நமது பணி!

வேலையில் லாதவர் வேலைபெற—நித்தம்
விடிவில் லாத்துயர் போய்மறைய
ஞாலமெல் லாமெழும் போரணியே—நம்
வாழ்வு கொடுத்திடும் பேரணியே!

படித்தவர் தெருவிற் சுற்றுகிறார்—பட்டம்
எடுத்தவர் சங்கம் கூட்டுகிறார்
படித்திட இன்று போகின்றோம்—நாளை
படிப்பின் பலனைக் காண்போமோ?

கொள்ளி நெருப்பும் புயற்காற்றில்—அனற்
கோளங்கள் சுடர்விடப் பணியாற்றில்
பள்ளிக் கூடங்கள் ஒவ்வொன்றும்—போர்ப்
பாசறை யாகிட மாட்டாதோ?

மாணவர் பேரணி அமைத்திடுவோம்—எழும்
மக்கள் அணியுள் இணைந்திடுவோம்
மாணவர் போர்முரச சார்த்திடுவோம்—எம்
மாணவர் பிரச்சனை தீர்த்திடுவோம்.

— எஸ். ஜி. கணேசவேல்

தீண்டாமை-சாதி அடக்குமுறையை ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கத்தின்

# மாபெரும் கொழும்புக் கூட்டம்

தீண்டாமையையும் சாதி அடக்கு முறையையும் ஒழிப்பதற்காகவும், அது பற்றி குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் இப் பிரச்சினையைத் தெளிவுபடுத்தி அவர்களின் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் பெறுவதற்காகவும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் கொழும்புக் கிளையால் கடந்த 16-ந் திகதி மாலை செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்திற்கு பல இன மக்களும் பல சமய மக்களும் தமது சாதி சமய வேற்றுமைகளை மறந்து இந்த கேடு கெட்ட சமூகக் கொடுமை மண்ணோடு மண்ணாக மறைந்தொழிய வேண்டும்; அதற்கு தமது பூரண நல்லாதரவை நல்க வேண்டும் என்ற பெருநோக்கோடு சமுகமளித்தனர். மண்டபம் நிரம்பி, பலர் வெளியில் நின்றும் சொற்பொழிவுகளைக் கேட்டனர்.

கூட்ட ஆரம்பத்தில் தீண்டாமையை, சாதி அடக்குமுறையை ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கத்தின் கொழும்புக் கிளையின் செயலாளர் தோழர் குமாரலிங்கத்தினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. அவர், யாழ்ப்பாணத்தில் எங்கும் பரவலாக உள்ள இப் பிரச்சினை மிகவும் கொடூரமானதாகவும் அநாகரீகமாகவும் உள்ளது. ஆனால் தென்னிலங்கையில் உள்ள சாதி அமைப்பு இவ்வளவு அடக்குமுறை வாய்ந்தது அல்ல; அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள இப் பிரச்சனை முழு இலங்கை மக்களுக்கும் ஒரு தீராத அவமானமாகவும் உள்ளது. ஆனபடியால் இப் பிரச்சனைபற்றி சகல மக்களுக்கும் தெளிவாக்கப்பட்டு முக்கியமாக சிங்கள மக்கள் மத்தியிலும் இருந்து இதற்கு ஆதரவு பெறும் நோக்கமாகவே இவ்வாறான கூட்டங்களை ஒழுங்கு படுத்தியுள்ளோம் என்று கூறி தோழர். எஸ். டி. பண்டாரநாயக்கா அவர்களை தலைமை தாங்கும்படி கேட்டுக் கொண்டார்.

தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் உயிரிழந்த வீரத் தியாகிகளான, கார்த்திகேசு, குமரேசு, இரத்தினம் வைத்திலிங்கம் ஆகியோருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தோழர் எஸ். டி. தமது தலைமையுரையில் ''சிங்கள மக்கள் மத்தியில் நடைபெறும் இக் கூட்டத்தின்மூலம் யாழ்ப்பாணத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எமது பூரண ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து 21 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனினும் சலூன்களுக்குச் சென்று முடி வெட்டவோ, பொதுக் கிணற்றில் தண்ணீர் அள்ளவோ, கோயிலுக்குப் போகவோ முடியாத நிலையில் தான் இக்கூட்டத்தை நடத்துகின்றோம். காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவால் 1957ம் ஆண்டு சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு 12 ஆண்டுகளின் பின்னும் பல அதிகாரிகளுடனும் மந்திரிமார் எம். பி. மாரோடும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டி உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுடைய போராட்டம் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் பிரதமரிடம் கேள்விகள் எழுப்பியபோது அவரிடமிருந்து ஒரு சொல்லைக்கூட

# தென் இலங்கை மக்களின் பேராதரவு

எம்மால் எதிர்பார்க்க முடியாமல் போயிற்று. இதிலிருந்து பொலிஸ் அதிகாரிகள் மட்டுமல்ல சகல மேலதிகாரிகளும் உயர் சாதி வெறியர்கள் பக்கமே என்பது தெட்டத் தெளிவாகின்றது. சிங்கள மக்களிடையே இப் பிரச்சினை உள்ளதாயினும் இவ்வளவு கொடுமையானதாக இல்லை. மாட்டைத் தெய்வமெனப் பூஜிக்கும் இந்துக்கள் தம்மில் ஒரு பகுதி மக்களை, மனிதனை எவ்வளவோ கொடுமைப்படுத்துகின்றார்கள். நாம் சுதந்திரம் பெற்றவர்கள் என்று எவ்வளவுதான் கூறினாலும் மாட்டுக்கு உள்ள சுதந்திரம் மனிதருக்கு இல்லை.'' என்றார்.

இன்று யு. என். பி. ஆட்சி நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படுத்திய கொடுமைகட்கும் அநீதிகட்கும் காரணம் தானே என்று கூறாது அவற்றையெல்லாம் நாட்டுமக்கள் தலையில் சுமத்திவிட்டு கஷ்டப்படும் சிங்கள மக்களைப் பார்த்து, வேலையில்லாதிருக்கும் 21 லட்சம் வாலிபர்களைப் பார்த்து, 15 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளைப் பார்த்து சாப்பாடின்றி இறப்பவர்களைப் பார்த்து இதற்கெல்லாம் கர்மபலன் காரணம் என்கிறார்கள். சென்ற ஆண்டில் பசியால் வாடிய ஒரு பிள்ளைக்கு ஒரு சதம் குறைவு என்பதற்காக பாண் விற்க மறுத்த முதலாளி ஒருவர் வெசாக் பண்டிகையின் போது 100 ரூபா கொடுத்து மோட்சத்துக்கு வழி தேட முயற்சித்ததை நான் காண முடிந்தது. இவ்வாறான பேர்வழிகள்தான் புத்தரையும் சில பிக்குகளையும் துணைக்கிழுத்துக் கொண்டு மதம் கூறும் தீர்வாக கர்மபலன் பற்றி கூப்பாடு போடுகின்றனர். மறுபுறம் இன்று உண்ண, உடுக்க, இருக்க வழியில்லாத ஏழைகளைப் பார்த்து பாராளுமன்றம் கூறும் தீர்வாக குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டும் என்று ஊளையிடுகின்றனர். இந்த கர்மபலனை மீற வழி தெரியாது சிங்கள மக்கள் இருக்கும் போது தீண்டாமைக்கெதிராக யாழ்ப்பாண மக்கள் நடத்தும் போராட்டம் போற்றப்படத்தக்கதே. இக் கர்மத்துக்கு எதிராகத்தான் 1917ம் ஆண்டு தோழர் லெனின் போராடி வெற்றியடைந்து ஒரு புதிய பாதையைக் காட்டியுள்ளார். பின் 1949ம் ஆண்டு பௌத்த நாடான சீனாவில் 60 கோடி சீன மக்கள் தலைவர் மாஓ தலைமையில் ஆயுத போராட்ட மூலம் தீர்க்க வழிகண்டார்கள். எமது நாட்டு பாராளுமன்றத்தில் நாலு சேனநாயக்கா அரசாங்கங்களும் 2 பண்டாரநாயக்கா அரசுகளும் வந்துபோனதுதான் மிச்சம். ஆகவே முன்பு புரன் அப்பு, கொங்கலகொட பண்டா ஆகியோர் ஏந்திய ஆயுத வழியைப் பின்பற்றி சகல ஒடுக்கப்படுகின்ற மக்களும் ஒன்றாகி, ஐக்கியப்பட்டு இந்த முதலாளித்துவ—நிலப்பிரபுத்துவ முறையை ஒழித்துக்கட்டுவதின் மூலம் தான் விடுதலை பெற முடியும் என்று கூறி முடித்துக்கொண்டார்.

அடுத்து தோழர் டானியல் அவர்கள்: ''யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இப் போராட்டத்துக்கு சிங்கள மக்கள் மத்தியிலிருந்து ஆதரவு கிடைக்க வேண்டும் என்ற எமது கருத்து இன்றிலிருந்து நிறைவேறுவதையிட்டு மகிழ்ச்சியடையும் அதே வேளையில் தாழ்த்தப்பட்ட $4\frac{1}{2}$ லட்சம் மக்கள் சார்பில் இதை தொடர்ந்தும் நடத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம். எமது முழு போராட்டங்களையும் அனுபவங்களையும் உங்களுக்கு தெரியப்படுத்த முடியாதபோதும் கடந்த $2\frac{1}{2}$ வருடகாலமாக நாங்கள் அனுபவித்த இன்னல்களையும் செய்த போராட்டங்களையும் ஓரளவு தெரிந்திருப்பீர்களென்றே நினைக்கிறேன். மற்றவர்களுக்கு தெரியப்படக் கூடாதென்ற ரீதியிலேயே இதுவரைகாலமும் உயர்சாதியினராலும் தமிழ் எம். பிக்களாலும் அமுக்கப்பட்டுவந்தது. இப் பிரச்சினை பற்றி பாராளுமன்றத்தில் தோழர் எஸ். டி. கேட்ட போது பதிலளிக்க முடியாத அமிர்தலிங்கம் பின் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டமொன்றில் தென்னிலங்கையில் பேச முடியவில்லையே என்று அங்கலாய்க்குமளவுக்கு இப் பிரச்சினை வெளியில் வந்தது சந்தோஷத்திற்குரிய விடயம்.

இன்று யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்களாகிய எமக்கு கோவிலுக்குள் போகவோ, தேனீர் கடைகள், சலூன்கள், சுடலைகள் பொதுக் கிணறுகள், பொது இடங்கள் ஆகியவற்றில் பிரவேசிக்கவோ, உரிமை பெறவோ முடியாது. எவ்வளவுதான் நாம் போராடியபோதும் பூரண உரிமைபெற எம்மால் முடியவில்லை. காரணம் இவற்றின் உடமையாளரான உயர் சாதியினரும், கோயில் நிர்வாகிகளும் சுயநலவாதிகளாகவும் பிற்போக்கு வர்க்கத்தினராகவும் இருப்பதுதான். கடந்த மாவிட்டபுர போராட்டத்தின்போது அவர்கள் இதில் அரசாங்கமோ சிங்கள மக்களோ, எம். பிக்களோ, பொலிசாரோ, சட்டத்தைப் பாதுகாப்பவர்களோ, பிற மதத்தவர்களோ, கம்யூனிஸ்டுகளோ, சரியான சைவ அனுஷ்டானம் அற்றவர்களோ, கல்வியறிவில்லாதவர்களோ, நாகரிகமற்றவர்களோ, சுத்தமற்றவர்களோ தலையிடக்கூடாது என்றார்கள். அப்படியாயின் இதில் தலையிடுவது யார் என்பது ஒருபுறமிருக்க மக்களால் முற்றாக வெறுத்தொதுக்கப்பட்ட, 1960 தேர்தலில் மூன்று தொகுதிகளில் கேட்டு மொத்தமாக 634 வாக்குகளைப் பெற்ற சுந்தரலிங்கம் தலையிடலாமா? அவருக்கு மாவிட்டபுர போராட்டத்தின்போது ஒவ்வொரு நாளும் 500 ரூபா கொடுக்கப்பட்டதாம். இப்படி அவமதிப்புக்குரிய செயலில் ஈடுபட்ட சுந்தரலிங்கத்துக்கு எதிராக மந்திரிமாரோ, எம். பிக்களோ, வழக்கறிஞர்களோ சுட்டுவிரலைத்தானும் அசையாததின் காரணம் என்ன? இதற்கு சரியான காரணம் தெரியாதபோதும் இலங்கையிலுள்ள சகல மேலதிகாரிகளும் தனது மாணாக்கர் என சுந்தரலிங்கம் கூறுகின்றபோது பிரதமரும், பொலிஸ் மா அதிபரும் எஸ். டியைத் தவிர்ந்த மற்ற எம். பிக்களும் அவரது மாணவர்தான் என்று எண்ண வேண்டியுள்ளது.'' என்றார்.

மேலும் அவர் பேசுகையில் ''இப்போது சில தமிழ்த் தலைவர்கள் சட்டமூலம் தீர்க்களாமென்கிறார்கள். சுந்தரலிங்கத்துக்கு எதிராக கோர்ட் தீர்ப்பளித்த பின்னும் அவர் எதிர்த்தே வேலை செய்தார். மாவிட்டபுரம் கோயினுள் துவக்குகள், கைகுண்டுகள், பொல்லுகள் கண்டெடுக்கப்பட்டு வெளியே கொண்டு வரும்போது, 1000 மேற்பட்ட எமது மக்கள் வாசலில் பார்த்துக் கொண்டு நின்றனர். ஆனால் சில மாதங்களின் பின் சாட்சி இல்லாத காரணத்தால் வழக்குத் தாக்கல் செய்ய முடியவில்லை என்று கூறப்படுவதைத்தான் நாம் காணமுடிந்தது. தெல்லிப்பளை தேனீர் கடை வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட எதிரி அப்பீலில் விடுதலை பெற்றார், கட்டுவன் தேனீர் கடையொன்றில் முதலில் தேனீர் கொடுக்க மறுத்தவர் பொலிசோடு வந்ததும் கொடுத்தார். மறுநாள் தேனீருக்குச் சென்றபோது கடைக்காரரே பொலிசைக் கூட்டி வந்து தேனீர் கேட்டவரை அடித்து சிறையில் போட்டார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது எமக்கு சட்டத்தை நம்ப இடமுண்டா? அத்துடன் எமக்கு வழக்கில் அப்பீல் எடுக்கவோ, பிரபலமான வழக்கறிஞர்களை நியமிக்கவோ எம்மிடம் பணமில்லை. ஆகவேதான் நாம் பிற்போக்கு இயக்கங்களுக்கு எதிராக புரட்சிகர இயக்கங்களுடன் சேர்ந்து விடுதலையைப் பெற முன்வந்துள்ளோம்.

பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசம் பற்றி கோயில் நிர்வாகிகட்கும் சகல தமிழ் எம். பி. கட்கும் அறிவித்தல் கொடுத்தோம். எமது அறிவித்தலுக்கு பதிலளித்த ஒரே

—6-ம் பக்கம் பார்க்க

## கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கோயில்களையும் தேனீர்க் கடைகளையும் மற்றும் பொது இடங்கள் அனைத்தையும் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று கூறப்படும் மக்களுக்குத் திறந்துவிடுமாறு கோரி இப்பொழுது யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இயக்கத்துக்கு தீண்டாமையும் சாதி அடக்குமுறையையும் ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கத்தின் கொழும்புக் கிளையினால் கூட்டப்பட்டுள்ள இக் கூட்டம் பூரண ஒத்துழைப்பைத் தெரிவித்துக் கொள்கிறது.

வட இலங்கையில் நிலவும் தீண்டாமையை கொடிய அநீதி என்று இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தச் சமூகக் கொடுமையை ஒழிப்பதற்குப் போதிய பலம் வாய்ந்த சட்டத்தை இயற்றுமாறும் இந்தக் கூட்டம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

## இந்திய அரசியலில் அண்ணாதுரையின் பாத்திரம் - 4

# வரலாற்றின் குப்பைத் தொட்டிக்கு உரியவரே அண்ணாதுரை

நவ காலனித்துவ நிலைக்கேற்ற விதத்தில் வெள்ளையன் கொடுத்த ''விடுதலையை'' அகில இந்திய பூர்ஷுவாக் கட்சியான காங்கிரஸ், நேரு குழுவின் தலைமையில் ஏற்றுக் கொண்டது போலவே, அண்ணாதுரையும் ஆகஸ்ட் பதினைந்து அதிகார மாற்றத்தை அசல் சுதந்திரமாக ஏற்றுக் கொண்டதையும், நாட்டாட்சியைக் கைகொண்ட முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கிசைந்த விதத்தில் பாராளுமன்ற (பூர்ஷ்வா) ஜனநாயகத்தை ஏற்று அதன்வழி நின்றார் என்பதனையும் சென்ற கட்டுரையிலே காட்டியிருந்தோம்.

நிலப்பிரபுத்துவச் சாய்வான நீதிக்கட்சியினின்றும் ''விடுதலை'' பெற்று, முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயக அமைப்பிற்குள் இயங்கத் தொடங்கிய காலகட்டத்திலே - தொடக்கத்திலே - சமதர்ம, சோஷலிஸம், சமத்துவம் முதலிய சொற்றொடர்களையும், இனவாதம் ஆகிய பிரதான கோஷங்களோடு கலந்து பிரச்சாரம் செய்தார் அண்ணாதுரை. இந்த யுகத்தின் நிகழ்ச்சி நிரலிலே முக்கியமானது சோஷலிஸம் தான். எனவே ''மக்கள் முதலாளித்துவம்'' என்று அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னை வர்ணிப்பதும், தரங்கெட்ட திரிபுவாதிகளிலிருந்து ஜனசங்கம் போன்ற இனவெறியர்கள் வரை யாவரும் (பாராளுமன்றத்தின் மூலமாகவேனும்) சோஷலிஸத்தை அடைய வேண்டும் என்று மாய்மாலம் பண்ணுவதும் மக்களை சோஷலிஸத்தின் பெயரால் ஏமாற்றுவதற்காகவே. ஏன், கம்யூனிஸத்தின் பரமவைரிகளாக இருந்த முசோலினி, ஹிட்லர் போன்றோரும் தமது படு பிற்போக்கான அதீத வலதுசாரி சர்வாதிகார தத்துவத்துக்கு தேசிய சோஷலிஸம் என்றுதானே பெயரிட்டனர்? சோஷலிஸத்தை (அதாவது அந்தப் பெயரை) தவிர்க்க இயலாமையாலேயே பல்வேறு பூர்ஷ்வா அரசியல்வாதிகள் தமது சுயநலத்தை மூடி மறைத்து மக்கள் மத்தியில் உலாவுவதற்காகச் ''சோஷலிஸம்'' என்ற பதத்தையும் சேர்த்துக் கொள்கின்றனர். அதன் விசித்திரமான விளைவாகவே, காந்திய சோஷலிஸம், கிறிஸ்தவ சோஷலிஸம், அரபு சோஷலிஸம், இஸ்லாமிய சோஷலிஸம், ஆபிரிக்க சோஷலிஸம், வேதாந்த சோஷலிஸம், ஜனநாயக சோஷலிஸம், பாராளுமன்ற சோஷலிஸம், பேபியன் சோஷலிஸம் முதலிய எத்தனையோ கலவைகள் காணப்படுகின்றன. ஆனால் இவற்றிற்கும் மார்க்ஸ் வழிவரும் விஞ்ஞான சோஷலிஸத்திற்கும் எத்தகைய தொடர்பும் கிடையாது. கம்யூனிஸ்ட் அறிக்கையில் மார்க்ஸும், எங்கெல்ஸும் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளனர்.

அண்ணாதுரையார் போதித்த ''திராவிட சோஷலிஸமும்'' மேற்கூறிய கலவைகளின் ஒன்றுதான். சோஷலிஸத்தின் முக்கிய பண்புகளின் ஒன்று அதன் சர்வதேசியத் தன்மை. திராவிட சோஷலிஸம் என்பது தேசிய சோஷலிஸம் போல இனவாதத்திற்கும் ஏகபோக முதலாளித்துவத்திற்கும் சேர்த்து இடப்படும் திரைகளில் ஒன்று எனலாம். சுருங்கச் சொன்னால் அண்ணாதுரை பிரசாரஞ் செய்தது திராவிட சோஷலிஸமல்ல; திராவிட முதலாளித்துவ தத்துவமாகும். சோஷலிஸத்துக்கு முன் திராவிடஸ்தான் இலட்சியத்தை (இன்று அந்த இலட்சியமும் கைவிடப் பட்டுவிட்டது.) வற்புறுத்துவதற்குப்' பின்வருமாறு விளக்கங் காட்டினார் சி. என். அண்ணாதுரை.''

### தென்னக முதலாளிகளின் குரல்

''இராமகிருஷ்ணர் படங்கள் கல்கத்தாவில் அச்சாகி நமக்குக் கிடைத்து டால்மியா சிமிட்டி பூசப்பட்ட சுவரிலே டாட்டா கம்பெனி அனுப்பும் ஆணியை அடித்து மாட்டும் போதெல்லாம், இந்த (திராவிடஸ்தான்) இலட்சியம், மெல்ல காதருகே நின்று கேட்கும் இதுதான் உன் நிலையா? உன் நாட்டிலே இரும்பு இல்லையா'? என்று கேட்டுவிட்டுச் சிரிக்கும். ஷோலாப்பூர், பம்பாயிலிருந்து வேட்டியும், சேலையும், லாகூருக்கும், பிஷாவாருக்கும் போக முடியாததால் அதிகமாக இங்கே வருகிறபோது வங்காள ரசாயனசாலையிலிருந்து மருந்துவகை இங்கு வருகிறபோது இந்த இலட்சியம் கவனத்துக்கு வரும்.''

இது யாருடைய குரல்? சோஷலிஸத்தின் குரலா? இல்லை. மக்களின் குரலா? இல்லை. தென்னிந்திய முதலாளிகள், உற்பத்தியாளர்கள், கைத்தொழிலதிபர்கள் முதலியோரது 'சந்தை தேடும்' குரலாகும்; வணிகர்களின் குரலாகும், ஆகையால்தான் பதவி பெற்றபின் முதன் முதலாகச் சென்ற வாரம் புதுடில்லிக்குச் சென்ற 'இளங்கோ' கருணாநிதியார் தென்னிந்திய துணி உற்பத்தியாளருக்கு (மில் அதிபர்களுக்கு) சுதந்திரமான—தனியான - ஸ்தாபனம் வேண்டும் எனக் கேட்டிருக்கிறார். வட இந்திய ''ஏகாதிபத்தியத்தை'' எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டு தென்னிந்திய முதலாளிகள் தொழில் விஸ்தரிப்பையும் புதிய முதலீடுகளையும், ஈவிரக்கமற்ற சுரண்டல்களையும் மேற்கொள்ளுவதற்கு ஏற்ற கேடயமாகவும் மூடுதிரையாவும் அமைந்ததே தி. மு. க. அதற்கேற்ற வார்த்தை ஜாலங்களையும் அரசியல் தகிடுதத்தங்களையும் கழைக்கூத்தையும் ஆடக்கற்றுக் கொடுத்த பெருமை காஞ்சித் தலைவருக்கு உரியது.

ஆனால் அண்ணாதுரையும் அவரது அருமைத் தம்பிகளும் மக்களிடமிருந்து மறைத்து வரும் அடிப்படை உண்மையொன்று உள்ளது. 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது. என்று கூவிக்கொண்டு தென்னக மக்களைச் சுரண்டி வாட்டி வதைக்கும் தமிழ் முதலாளிகளும் சரி, அவர்களால் சொல்லளவில் (உள் முரண்பாடு காரணமாக) திட்டப்பட்

## அரசியல், கலை, இலக்கியம் கலாச்சாரத்தை மலினப்படுத்தி ஆபாசமாக்கிய வர்த்தகர்

டாலும் உண்மையான வர்க்க சகாக்களான வட இந்திய பெரு முதலாளிகளும் சரி இரு பகுதியினருமே — மேனாட்டு ஏகாதிபத்திய வாதிகளின் கைப்பொம்மைகளாகவும் எச்சில் உண்டு வாழ்பவர்களாகவும், தேசவிரோதிகளாகவும் இருக்கின்றனர் என்பதே அந்த உண்மையாகும்.

### கேவலமான சந்தர்ப்பவாதம்

வெள்ளைக்காரனிடமிருந்து பெற்ற அரசியல் ''சுதந்திரத்தை'' ப் போற்றிப் பேணும் அண்ணாதுரை வகையறாக்கள், இன்று இந்தியாவை ஆட்டிப் படைத்து ஏப்பமிட்டுவரும் ஆங்கிலேய-அமெரிக்க - ஜெர்மானிய-பொருளாதார ஏகாதிபத்தியதைப் பற்றியோ அவற்றின் பாரதூரமான விளைவுகளைப் பற்றியோ, மூச்சுவிடாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்க செய்திதான். சமீப காலத்தில் இந்திய திரிபுவாதிகளுடனும் தி. மு. க. வினர் காதல் புரிந்து வந்துள்ளனர். அண்ணாதுரை தி. மு. க. தவிர்ந்த சகல (ஒன்றுக்கொன்று) கட்சிகளுடனும் வெவ்வேறு தொடர்புகளும், கூட்டுக்களும் செய்யப் பட்டுள்ளன. சீன எதிர்ப்பில் காங்கிரசையும் கட்டித் தழுவி ஒருபடி மேலே சென்றார் அண்ணாதுரை. அபொழுதுதான் (பெரு முதலாளித்துவத்தினதும் அமெரிக்கச் செல்வாக்கினதும் ஆணைக்கிணங்கி) திராவிட நாட்டுப் பிரிவினை கோரிக்கை கைவிடப்பட்டது.

இவ்வாறு முஸ்லீம் லீக்கிலிருந்து சுதந்திராவரை—திரிபு வாதிகளிலிருந்து தனியார் வரை-யாவருடனும் தி. மு. க. வினர் கூட்டுச் சேர்த்து வந்திருப்பது, அண்ணாதுரையின் ஈடிணையற்ற சந்தர்ப்ப வாதத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. தமது கழகம் சந்தர்ப்பவாதத்திற்குப் பலியானதில்லை என்று அப்பாவித்தனமாக நிரூபிக்க முயன்ற மாஜி 'மாண்புமிகு' நாவலர், (இப்போது நாவடங்கியிருப்பவர்) நெடுஞ்செழியன், ''கழகம் வேறு யாருக்காகவும் வேண்டாத கொள்கைகளை ஏற்றுக் கொண்டதுமில்லை; வேறு யாருக்காகவும் உள்ள கொள்கைகளை விட்டுக் கொடுத்ததுமில்லை.'' என்று மழுப்புகிறார். ஆனால் சந்தர்ப்பவாதம் என்றால் என்ன? இக் கேள்விக்கு மாமேதை லெனின் ஒரு சமயத்தில் பின் வருமாறு பதிலிறுத்தார்!

''சந்தர்ப்பவாதம் என்பது பெரும்பாலும் அவதூறான சொல்லாகவே தவறாகக் கருதப் படுகிறது. இதனால் அடிப்படைப் பொருள் கவனிக்கப் படாமற் போகிறது. ஒரு சந்தர்ப்பவாதி தனது கட்சியைக் காட்டிக் கொடுக்க வேண்டியதில்லை; அவன் துரோகத்தனமாக நடப்பதில்லை; கட்சியை விட்டு விலகுகின்றான் என்பதும் அர்த்தமில்லை. அவனது முக்கியமான — இயல்பான— பண்பு யாதெனில் அவ்வப் போது நிலவும் உணர்ச்சிக்கு இடமளிப்பதாகும்; ஒவ்வொரு நாகரிக' மானதாகவும் ''பாஷனை' வும் கருதப்படுவதை நிராகரிக்குஞ் சக்தியில்லாதிருப்பதாகும்; அரசியலைப் பொறுத்தவரையில் தூரப்பார்வையும் முதுகெலும்பும் இல்லாதிருப்பதாகும். சுருங்கச் சொல்வதானால், சந்தர்ப்பவாதம் என்பது நிரந்தரமான, அடிப்படையான நலன்களை, மாறுந்தன்மையுடைய, தற்காலிகமான சில்லறை நலன்களுக்காகத் தியாகஞ் செய்வதாகும். புத்திஜீவிகளுக்கு இயல்பான இக் கண்ணோட்டம் நிலவினால் உண்மையான புரட்சிகர வர்க்கத்திற்கு ஏற்ற கொள்கை எதனையும் கடைப்பிடிக்க இயலாது; அவ்வப் போதைய சிறுச்சிறு மாற்றங்களுக்கும் தடுமாற்றங்களுக்கு மூடாக தளராது ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து, தியாக உணர்வுடனும், அஞ்சா நெஞ்சுடனும், தன்னலமற்ற உறுதிப்பாட்டுடனும் எதிரியுடன் போராட இயலாது. ஆகவேதான், வர்க்க போதமுள்ள பாட்டாளி வர்க்கம் தன்னைச் சாரமுற்படும் புத்திஜீவிகளை நிதானமாக விமர்சித்தல் அவசியம். அப்பொழுதுதான் சந்தர்ப்பவாதத்தைச் சாடி முறியடிக்க முடியும்.''

1906-ல் ரஷ்ய தீவிரவாத புத்திஜீவிகளைப்பற்றி புரட்சி மேதை லெனின் எழுதியது நினைவில் நிறுத்த வேண்டிய மேற்கோளாகும். தமது கழகத்தின் ஆரம்ப கட்டத்திலே தவிர்க்க இயலாதபடி அண்ணாதுரை ''சமதர்ம'' பரிபாஷை பேசினார் எனருல் அது மேற்கூறிய அப்பழுக்கற்ற சந்தர்ப்ப வாதமேயாகும். அதே சந்தர்ப்பவாதமே இன்று அவரையும் தம்பிமாரையும் ''அரசியல் ஞானி'' ஆச்சாரியாரிடம் சரணாகதியடையவும், முன்பு வெறுத்த ''மத்திய அரசு'' வுடன் வேண்டியளவு நல்லுறவுகளை வளர்க்கவும், மத விவகாரங்களுக்குத் தனியொரு அமைச்சு நிறுவவும், பிரிவினைக் கோரிக்கையைக் காற்றில் பறக்க விடவும் காரணமாயிருக்கிறது. இது அண்ணாதுரை, கருணாநிதி போன்றோரின் தனிப்பட்ட பலவீனம் மட்டுமல்ல; அவர்களது வர்க்கச் சார்பும் கண்ணோட்டமும் பாராளுமன்ற அரசியலும் பதவித் தேவைகளும் இவ்வாறு இயங்க வைக்கின்றன.

### சொல்லொன்று செயலொன்று

தி. மு. க. தொடக்க விழாப் 'பேருரை'யில் (விநோபாவின் கீதைப் பேருரை போல) ''ஏழை எளியவர்களை எளிமையிலிருந்து விடுவிக்க வாழ வழியற்ற மக்களுக்கு வாழ்க்கைப் பாதை வகுத்துக் கொடுக்க, இல்லாமையை இல்லாததாக்க, கொடுமையை ஒழித்துக்கட்டி சமத்துவ ஏற்பாட்டை வகுக்க'' தாம் பாடுபடப்போவதாக முழங்கினார். ஆனால் அவர் குறிப்பிட்ட ''ஏழை எளியவர்களும், வாழ வழியற்றவர்களும்'' யார் என்று தான் என்றுமே தெளிவாகக் கூறப்படவில்லை. ''கொடுமையை ஒழித்துக்கட்ட''ப் போவதாக இருபது வருடங்களுக்கு முன் முழங்கிய அண்ணாதுரையின் ஆட்சியிலேயே, வெண்மணிச் சம்பவம் நடந்தது. ''அண்ணா''வின் திராவிடர் ஆட்சியிலேயே தமிழகத்து தஞ்சை நிலத்து—குடிசைகளில் எளிமையில் வாழ்ந்த ஏழைகளை ''துப்பாக்கியால் துளைத்தும், தடிகொண்டு தாக்கியும், கத்தியால் குத்தியும் குற்றுயிராக்கி, பிறகு அவர்கள் அனைவரையும் ஒரே குடிசைக்குள் கொண்டு வந்து அடைத்து, தப்பித்தவறிக்கூட வெளியேறிவிட முடியாதபடி வெளிக் கதவுகளைப் பூட்டி, துப்பாக்கிகளுடன் காவல்காத்து நின்று,

7-ம் பக்கம் பார்க்க

# சென்பாஓ தீவு என்றும் சீன பிரதேசமே

'சென்பாஓ தீவு எப்போதும் சீனப் பிரதேசமாக இருந்து வருகின்றது' என்ற தலைப்பில் சீன வெளிநாட்டு அமைச்சின் தகவல் பகுதி வெளியிட்டுள்ள அறிக்கை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

-ஆர்

## பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண விழைகிறது மக்கள் சீனம்

## ராணுவ மோதலை கட்டவிழ்த்துவிடுகிறது சோவியத்திரிபுவாதம்

சீனாவின் ஹெய்லுங்கியாங் மாகாண ஹூலின் சிறுபட்டினத்திலுள்ள அஸ்ஸூறி நதியிலுள்ள சென்பாஓ தீவிற்குள் பகிரங்கமாக ஊடுருவல் செய்த பெரும் தொகையான ராணுவ படையினரை சோவியத் திரிபுவாத துரோகக் கும்பல் 1969 மார்ச் 2ல் அனுப்பியதுடன், காவல்புரியும் கடமையிலிருந்த சீன எல்லைப்புற காவற் படையினர் மீது ஒரு திடீர் தாக்குதலை நடத்தி, அவர்களில் அநேகரைக் காயப்படுத்திக் கொன்று குவித்தது. இதன் மூலம் அது சீன மக்களுக்கு எதிராக ஒரு புதிய பாரதூரமான குற்றத்தைப் புரிந்து, மற்றுமொரு ரத்தக் கடனைப் பெற்றுள்ளது. எமது நாட்டிலுள்ள கோடிக்கணக்கான படை வீரர்களும் சாதாரண மக்களும் இதற்கு ஆழமான கோபத்தையும் வெறுப்பையும் தெரிவித்துள்ளனர்.

எப்படியிருப்பினும், இந்த சம்பவத்திற்குப் பின்பு, சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல் கறுப்பை வெள்ளை என்று கூறிக்கொண்டு, சரியையும் பிழையையும் குழப்பியடித்து மயக்கி, சென்பாஓ தீவை சோவியத் பிரதேசத்தின் பகுதியாக வர்ணித்து, சீன பிரதேசத்திற்குள் சோவியத் திரிபுவாத ராணுவப் படைகளின் ஊடுருவலையும், சீன எல்லைப்புற காவற்படையினர் மீது அவர்களுடைய தாக்குதலையும் மூடி மறைத்து சோவியத் எல்லைப்புறத் துருப்புக்களை தாக்குவதற்கு சீன எல்லைப்புற காவல்படையினர் சோவியத் அரசின் எல்லையைத் தாண்டியதாக வர்ணித்தது. இது வெறும் அர்த்தமற்றது.

### ஜார் ஏகாதிபத்தியத்தின் பகல் கொள்ளை

சென்பாஓ தீவு எல்லா நேரத்திலும் சீன பிரதேசமாக இருந்து வந்திருக்கின்றது. எர்குணு நதி, கொர்பிரஸா நதி, சீன — சோவியத் எல்லையின் கிழக்குப் பகுதிலிருந்து வெளிப்புற கிஹிங்கான் மலைகள், ஹெய்லுங்கியாங் நதியின் வடக்கு விரிந்த பரந்த பிரதேசங்கள், வெளிப்புற கிஹிங்கான் மலைகளின் தெற்கிலுள்ள பரந்த பிரதேசங்கள், அஸ்ஸூரி நதியின் கிழக்குப் பிரதேசங்கள் ஆகிய சகலனவும் சீன - பிரதேசமாக இருக்கின்றன என்று 1689 செப்டம்பர் 8ம் திகதி ''சீன - சோவியத் நிப்சு உடன்படிக்கை நிர்ணயிக்கின்றது. சென்பாஓதீவுஇருக்கின்ற அஸ்ஸூறி நதி அப்பொழுது அது சீனாவின் ஒரு உள்நாட்டு நதியாக இருந்தது. சீனாவிற்கு எதிரான அவர்களுடைய ஆக்கிரமிப்பில் பிரித்தானிய-பிரான்ஸ் ஏகாதிபத்திய நேசத்துருப்புக்கள் ரிஎன்சின்னை தாக்கி, பீகிங்கை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் வேளையில், ரஷ்ய ஜார் ஏகாதிபத்தியம் 1858 மே 28ல் சமத்துவமற்ற ''ஐகுன்னின் சீன - ரஷ்ய உடன்படிக்கையை'' கைச்சாத்திடுவதற்கு ராணுவ பலாத்காரத்தின் மூலம் சிங் அரச வம்சத்தின் அதிகார வர்க்கத்தை நிர்ப்பந்திப்பதற்கு இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தியது. இந்த உடன்படிக்கையின் மூலம் ஹெய்லுங்கியாங் நதியின் வடக்கிலுள்ள சீன பிரதேசத்தின் 600,000 சதுர கிலோ மீட்டர்களுக்கு மேலான பிரதேசத்தை இணைத்ததுடன், சீனாவினதும் ரஷ்யாவினதும் கூட்டு சுவாதீனத்தின் கீழ் அஸ்ஸூறி நதியின் கிழக்கிலுள்ள சீன பிரதேசத்தின் 400,000 சதுர கிலோ மீட்டர்களை கோரியது. சீனாவுக்கு எதிரான பிரித்தானிய பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தினால் கொண்டுவரப்பட்ட ராணுவ தாக்கத்தை மீண்டும் சாதகமாக எடுத்துக் கொண்டு, பிரித்தானிய பிரெஞ்சு ஆக்கிரமிப்பு துருப்புகளினால் பீகிங் முற்றுகையிடப்பட்ட பின்பு, ரஷ்ய ஜார் ஏகாதிபத்தியம் 1860, நவம்பர் 14ல் மற்றுமொரு சமத்துவமற்ற ''சீன-ரஷ்ய பீகிங் உடன்படிக்கை''யை கைச்சாத்திடுவதற்கு சிங் ராஜவம்சத்தின் அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தது. இதன் மூலம் அஸ்ஸூறி நதியின் கிழக்கிலுள்ள சீன எல்லைப் பிரதேசத்தையும் ரஷ்யாவிற்குள் அது பலாத்காரமாக இணைத்தது.

### மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் அம்பலப்படுத்தினர்கள்

1857, 1858ல் மார்க்ஸ் சுட்டிக்காட்டியது போல, 1840ம் ஆண்டு அபினி யுத்தத்தை, சீனாமீது ''வடக்கிலிருந்து ரஷ்யாவின் வெற்றிகரமான ஊடுருவலால் தொடரப்பட்டு, சீனாவில் தற்பொழுது ஆட்சி புரிகின்ற இனத்தின் (மஞ்சு-வம்சம்) பிறப்பிடமான ஆமூர் நதியின் (ஹெய்லுங்கியாங் நதி) கரையோரங்களை ரஷ்யா தனக்கு சொந்தமாக்கிக் கொண்டது. அதற்கு மேலாக, ''ஐகுன் சீன - ரஷ்ய உடன்படிக்கை'' கைச்சாத்திடப்பட்ட பின்பு, ஏங்கெல்ஸ் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றார்''. ''பீகிங்கிற்கு யுத்தத்தை கொண்டு செல்வதற்கு இறுதியாக இங்கிலாந்து தீர்மானித்த பொழுது, தனக்கு அனுகூலமாக சிலவற்றை எடுக்கும் நம்பிக்கையில் பிரான்ஸ் இங்கிலாந்துடன் சேர்ந்து கொண்ட பொழுது, பிரான்ஸையும் ஜெர்மனியையும் ஒன்றாக வைக்கக்கூடிய அளவு ஒரு பெரிய இடத்தையும், டன்யூப் நதியைப் போன்ற ஒருபெரிய நதியையும் சீனாவிடமிருந்து'' ரஷ்யா கொள்ளையடித்தது. ஆசியாவில் ரஷ்ய ஏகாதிபத்திய கொள்கையின் பணி ''முழு பேர்சியாவை கைப்பற்றுது, சீனாவை பிரிப்பதை பூரணமாக்குவது'' என்று லெனின்கூட சுட்டிக் காட்டியுள்ளார்.

சீனமீது ரஷ்ய ஜார் ஏகாதிபத்தியத்தினால் திணிக்கப்பட்ட ''ஐகுன் சீன - ரஷ்ய உடன்படிக்கையினதும்'' ''சீன-ரஷ்ய பீகிங் உடன்படிக்கையினதும்'' ஆக்கிரமிப்பு, சமத்துவமற்ற தன்மையை, இந்த சிறப்புவாய்ந்த முடிவுகளினால் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஆகியோர் பூரணமாக அம்பலப்படுத்தினர்கள்.

சமத்துவமற்ற ''சீன — ரஷ்ய பீகிங் உடன்படிக்கை''யின்படி கூட சென் பாஓ தீவு மறுதலிக்கமுடியாத சீன் பிரதேசமாக இருக்கின்றது. 'சீன—ரஷ்ய பீகிங் உடன் படிக்கை நிர்ணயித்தது. ''அஸ்ஸூறி நதியின் முகத்துவாரத்தில் இருந்து தெற்கு நோக்கி ஷிங்காய் ஏரிவரை, எல்லைக்கோடு அஸ்ஸூறி ஸூங்ஆச்சா நதிகள் வழியாக செல்லுகின்றது. இந்த நதிகளின் கிழக்குப் பக்கத்திலிருக்கும் நிலம் சீனாவிற்கு சொந்தமானது''. சொந்தமானது. இந்த நதிகளின் மேற்குப் பகுதியிலுள்ள நலம் சர்வதேச சட்டத்தினால் வகுக்கப்பட்ட கோட்பாடுகளின் படி, பிரயாணம் செய்யக் கூடிய எல்லை நதிகள் சம்பந்தப்பட்ட வரையில் பிரதான கால்வாயின் மத்திய கோடுதான் தீவுகளின் சொந்தத்தை தீர்மானிக்கும் எல்லைக்கோட்டை உண்டாக்க வேண்டும். அஸ்ஸூறி நதியின் பிரதான கால்வாயின் பிரதான மத்தியகோட்டின் சீனாவின் பகுதியில், சென்பாஓ தீவின் அருகாமையில் உள்ள கப்பொற்சு, சிலிசின் தீவுகள் எல்லாம் இருக்கின்றதுடன், சீனாவின் அதிகார எல்லையின் கீழ் எப்பொழுதும் இருந்து வந்துள்ளன. சீன எல்லைப்புற காவற் படையினர் எல்லா நேரத்திலும் இந்த தீவுகளை காவல்புரிந்துவருவதுடன், இத்தீவுகளின் சீன குடிமக்கள் எல்லா நேரத்திலும் உற்பத்தி செய்து வந்தார்கள். 1964ல் சீன - சோவியத் எல்லைப் பேச்சுவார்த்தைகளின்போது, இந்த தீவுகள் சீன பிரதேசம் என்பதை சோவியத் யூனியனால் ஒத்துக்கொள்ளாமலிருக்க முடியவில்லை.

### லெனினால் தலைமை தாங்கப்பட்ட சோவியத் ஆட்சியின் பிரகடனம்

1920 செப்டம்பர் 20ல் லெனினால் தலைமை தாங்கப்பட்ட சோவியத் அரசாங்கம், ''சீனாவுடன் முந்திய ரஷ்ய அரசாங்கத்தினால் செய்யப்பட்ட சகல உடன்படிக்கைகளும் செல்லுபடியாகாது, கைப்பற்றப்பட்ட எல்லா சீன பிரதேசத்தையும், சீனாவிலுள்ள சகல ரஷ்ய சலுகைகளையும் அது துறந்து சீனாவிடமிருந்து ஜார் அரசாங்கத்தினாலும் ரஷ்ய பூர்ஷுவா வர்க்கத்தினாலும் பேராசையுடன் பலாத்காரமாகக் கைப்பற்றப்பட்ட சகலவற்றையும் சீனாவிற்கு திருப்பிக் கொடுக்கின்றது'' என்று பிரகடனப்படுத்தியது. அந்த நேரத்தில் ஒரு பிற்போக்கு அரசாங்கத்தினால் சீனா ஆளப்பட்டதன் காரணமாக லெனினுடைய இந்த மகத்தான சாசனம் செயல் முறைக்கு வரத்தவறிவிட்டது.

மக்கள் சீன குடியரசு ஸ்தாபிதத்தின் பின்பு, சீனாவிற்கும் சோவியத் யூனியனிற்கும் இடையிலுள்ள எல்லைப் பிரச்சினையை நியாயபூர்வமாக தீர்த்துக்கொள்ளக் கூடியதாகவிருந்தும், வரலாறு விட்டுச் சென்ற எல்லைப் பிரச்சினைகள் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்றும், ஒரு மரபுநிலைமையை தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் என்றும் சீன அரசாங்கம் உறுதியாக நம்புகின்றது. வரலாறு விட்டுச்சென்ற தனது அயல் நாடுகளான பர்மா, நேபாளம், பாகிஸ்தான், மங்கோலிய மக்கள் குடியரசு, ஆப்கானிஸ்தான் ஆகியவற்றின் சிக்கலான எல்லைப் பிரச்சினைகளை சீன அரசாங்கம் அடுத்தடுத்து திருப்திகரமாக தீர்த்தது. ஆனால் சீனாவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலுள்ள, சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலுள்ள எல்லைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் தொடர்ந்திருக்கின்றன. சீன—இந்திய எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துடன் சீன அரசாங்கம் திரும்பத் திரும்ப பேச்சுவார்த்தைகளை நடத்தியது, ஆனால் இந்திய பிற்போக்குவாதிகளால் அப் பேச்சுவார்த்தைகள் சீர்குலைக்கப்பட்டன. 1964ல் சீன அரசாங்கம் சோவியத் அரசாங்கத்துடன் எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளை நடத்தியது. அந்த பேச்சுவார்த்தையின் போது, சீனாவினதும், ரஷ்யாவினதும் மக்களின் கைகளில் அதிகாரம் இல்லாமலிருந்த பொழுது, சீனா மீது ரஷ்ய ஜார் ஏகாதிபத்தியத்தினால் திணிக்கப்பட்ட ''சீன—சோவியத் ஐகுன் உடன்படிக்கை''யும், ''சீன—சோவியத் பீகிங் உடன்படிக்கை''யும் தற்போதைய சீன—சோவியத் எல்லை சம்பந்தமான இதர உடன்படிக்கைகள் எல்லாம் சமத்துவமற்றஉடன்படிக்கைகளாக இருக்கின்றன என்று சீன தரப்பு தெளிவுபடுத்தியது.

### மக்கள் சீனத்தின் பெருந்தன்மை

சீன சோவியத் மக்களுக்கிடையிலுள்ள புரட்சி நட்புறவை வலுப்படுத்தும் பேராவலினால் உந்தப்பட்ட சீன தரப்பு, இரு நாடுகளுக்கிடையிலுள்ள எல்லைக் கோட்டின் முழு ஒழுங்கை தீர்மானிப்பதற்கும், எல்லை சம்பந்தமாக இருக்கும் சகல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அடிப்படையாக இந்த உடன்படிக்கைகளை எடுப்பதற்கு விரும்பியது; இந்த உடன்படிக்கைகளைமீறி மற்றதரப்பின் பிரதேசத்தை முற்றுகையிட்டிருக்கும் எந்த தரப்பும், கொள்கை அளவில் மற்றதரப்பிற்கு முழுதாக, நிபந்தனையின்றி அந்த பிரதேசத்தை திருப்பிக்கொடுக்க வேண்டும், ஆனால், உடன்படிக்கைகளின் அடிப்படையிலும், பரஸ்பரம் சரிசெய்வதினதும், பரஸ்பரம் புரிந்துகொள்வதினதும், ஒரு சமத்துவ நிலைபற்றிய ஆலோசனையினதும் கோட்பாடுகளின்படி இரு தரப்புக்களினால் எல்லையிலுள்ள தனிப்பட்ட இடங்களில் அத்தியாவசியமான திரும்ப ஒழுங்குபடுத்துதல்களை இது தடுக்கமாட்டாது. எப்படியிருப்பினும், சீன தரப்பினால் மேலே கூறப்

6-ம் பக்கம் பார்க்க

# ஒரு அடி அடித்தால் திருப்பி இரு அடி கொடு

◎ 3-ம் பக்கத் தொடர்

யொரு தமிழ் எம். பி. கதிரவேற்பிள்ளையும் சமாதான வழியைக் கடைப்பிடிக்கும்படி கூறுகிறார். இச்சமாதான வழி. காந்திக்கு முற்பட்டது. இதுவரை காலமும் சமாதானம் கூறியே எம்மை ஒடுக்கி வந்தபடியால் எமக்கு இது பழைய பாடம். நாம் இதைக் கேட்டு ஏமாற இனிமேல் தயாரில்லை. இந்த நாட்டிலுள்ள சிங்கள—தமிழ் ஒடுக்கப்படுகின்ற சுரண்டப்படுகின்ற மக்களைப் பிரிக்கும் நோக்கோடு செனட்டர் நடராசா, சிங்களத் தலைவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை தூண்டி விடுவதன்றி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உயர் சாதிக்கும் ஒருவித பிரச்சனையும் இல்லையென்று கூறித் திரிகிறார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது இவர்கள் எல்லாம் இதைத் தீர்க்கும் நோக்கத்தோடு கூறவில்லை என்பதும், தீர்க்கும் நோக்கமே இல்லையென்பதும் தெளிவாகின்றது. ஆகவே இறுதியில் இந்த நாட்டிலுள்ள தாழ்த்தப்படுகின்ற — ஒடுக்கப்படுகின்ற சிங்கள—தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்துதான் எமது விடுதலையையும் இந் நாட்டின் விடுதலையையும் பெறமுடியும் என்று திட்டவட்டமாக நம்புவதால் தான் உங்களின் ஆதரவைப் பெற விரும்புகிறோம். எனவே எங்களது சகல போராட்டங்கட்கும் உங்களது பூரண ஆதரவைத் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்''

அடுத்துப் பேசிய தாமராம தேரோ ''இந்தக் கொடிய முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ முறைக்கெதிராக சகல ஒடுக்கப்பட்ட, சுரண்டப்படும் மக்களனைவரும் கிளர்ந்தெழுந்து ஆயுதம் ஏந்தி போராடுவதன் மூலம்தான் விடுதலை பெறமுடியும் என்றார். சில பௌத்த பிக்குகள் தாழ்த்தப்பட்ட மக்கள் பௌத்த மதத்தை தழுவுவதன் மூலம் பிரச்சினை தீரும் என்கின்றனர். ஆனால் அந்தவிதமாக இப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இறுதியில் தோழர் சண் யேசுகையில்: தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்கள் மத்தியில் உள்ள முற்போக்கு நண்பர்கள் பலர் இக் கூட்டத்தில் வந்து பேசியது மன்றி எமது போராட்டத்துக்கு பூரண ஆதரவளிப்போம் என்று கூறிய அதே வேளையில்; முக் கூட்டு முன்னணியினர் எமது போராட்டத்தை திசை திரும்பும் முயற்சியில் இப் பிரச்சினை பற்றி ஆராய ஒரு கமிஷன் நியமிக்கும்படி பாராளுமன்றத்துக்கு ஒரு மனு அனுப்பி தமது பாராளுமன்ற பாதைப் பல்லவியைப் பாடியுள்ளனர். நாம் போராடாமல் எதையும் பெற முடியாது. அடியை வாங்கிக்கொண்டு சலாம் போட்டபடியால்தான் இந்த நிலைமைக்கு எம்மை அவர்களால் தள்ள முடிந்தது. ஒரு அடி அடித்தால் திருப்பி இரண்டு அடி அடி என்று சரியானதும் தவறற்றதுமான பாதையைச் சொல்லிக் கொடுத்தபடியால்தான் கடந்த ஒரு சில வருடத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்படைந்து போராடி சில உரிமைகளைப் பெறுவதை உணர முடிகின்றது. எம்மைப் பலாத்கார வாதிகள் என்கிறார்கள். யார் பலாத்காரவாதி? கோயிலுக்குள் கும்பிடப்போகிறவன் பலாத்காரவாதியா அல்லது கும்பிடப் போகிறவனை பலவந்தமாக தடுத்து நிறுத்துபவன் பலாத்காரவாதியா? தாமாக எம்மீது பலாத்காரம் செய்துவிட்டு எம்மீது குற்றஞ் சாட்டுபவர்கள் தாம் செய்யும் போது சிறிதளவாக உள்ளது. பின் நாம் அதை எதிர்த்து புரட்சிகர பலாத்காரம் செய்யும் போது கூடிவிடுகின்றது என்று நியாயம் காட்டுகின்றார்கள். ஆனால் இந்த நியாயவாதிகளுக்கு நாம் ஒன்று கூற விரும்புகின்றோம். எமது பழைய சமய புராணங்களையும் இதிகாசங்களையும் எடுத்துப் பாருங்கள். முருகப் பெருமான் அரக்கர்களை சமாதானம் அகிம்சை போதித்து அடக்கினாரா? அல்லது வேலாயுதம் கொண்டு பலாத்காரம் பாவித்து அடக்கினாரா? இதே போன்றுதான் இராமன் இராமபாணம் கொண்டு பலாத்காரமாக இராவணனையும், பாண்டவர்கள் பாஸ்பதாஸ்திரம் கொண்டு கௌரவர்களையும் அழித்தார்கள். எனவே இது மார்க்ஸோ மா சே-துங்கோ சொல்லித் தந்தது அல்ல மார்க்ஸிஸ - லெனினிஸத்துக்கு எத்தனையோ வருடங்கட்கு முந்திய கந்தபுராண மூலம் பலாத்காரம் செய்வது பற்றி எமக்குச் சொல்லித்தரப்பட்டு விட்டது. எனவே இது பற்றி சாதிவெறியர்களும் மற்றவர்களும் ஒப்பாரி வைப்பதில் அர்த்தமில்லை'' என்றார்.

மேலும் அவர்: ''குட்டக் குட்டக் குனிபவனும் மடையன் குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்'' என்றொரு பழமொழி உண்டு. இது தான் இதுகாலவரைக்கும் நடைபெற்று வந்தது. இன்று விழித்தெழுந்து விட்டோம். இன்று நீக்ரோ மக்கள் செய்வது என்ன? மார்ட்டின் லூதர் கிங்கின் உபதேசமே அவரைப் பாதுகாக்கவில்லையென்றால் பிறகு மற்ற நீக்கிரோக்களை எங்கே அகிம்சையால் பாதுகாக்க முடியும். எனவே தான் இன்று அவர்கள் ''எமக்குத் தேவை அகிம்சையல்ல, துவக்கு'' என்கிறார்கள். இன்று மார்க்சிஸம்—லெனினிஸம் விரிவடைந்த கட்டமான மா சே-துங் சிந்தனையாக மலர்ந்துள்ளது. தவறற்றதும் நியாயமுள்ளதுமான அதன் கீழ் இன்று உலகமெங்கும் அடக்கியொடுக்கப்பட்ட மக்கள் பெரிய ஒரு தீச்சுவாலையை உண்டாக்கியுள்ளார்கள். உலகம் அதன் கீழ் வெற்றியை நோக்கிச் செல்லும் போது நாம் மட்டும் அதனைக் கைக்கொள்வதில் என்ன தவறு! எனவே இலங்கையிலுள்ள தமிழ் - சிங்கள முஸ்லீம்களிலுள்ள சகல முற்போக்கு தொழிலாளி - விவசாயி- மாணவர்கள் ஒன்றிரண்டு போராட வேண்டும். அப்போதுதான் எமது பொது எதிரியை அழித்து நாம் முன்னேற முடியும். சாதிவெறிக்கும் இனவெறிக்கும் எதிராக வாயளவில் ஒரு மூலையில் இருந்து பேசுவதில் பயனில்லை. சிங்கள மக்கள் மத்தியிலுள்ள வகுப்புவெறியை எதிர்த்து சிங்கள மக்களிலுள்ள முற்போக்காளரும், தமிழ் மக்கள் மத்தியிலுள்ள வகுப்புவெறியை எதிர்த்து தமிழ் மக்களிலுள்ள முற்போக்காளரும் பொதுவான சகல பிரச்சினைகளுக்கும் பொது எதிரிக்கெதிராக சகலரும் ஒன்றாக ஐக்கியப்பட்டு பாராளுமன்ற முறை தவிர்த்த புரட்சிகரமான போராட்டம் முன் கொண்டு செல்லப்பட வேண்டும். அதுதான் எம்முன் இன்றுள்ள தலையாய கடமை. அப்போதுதான் எமது பூரண விடுதலையை நாம் பெறமுடியும்'' என்று கூறி முடித்துக் கொண்டார்.

மேலும், அழகியவண்ண, ஐ. கரண்ணகொட, எச். எல். கே. கரவிட, சி. டி. எஸ். சிரிவர்தன, திஸ்ஸ விஜயரத்தின, அலெக்சாண்டர் மத்தியூ, எம். ஹலிம் இஷாக் ஆகியோர் கூட்டத்தில் பேசினார்கள்.

# சென்பாஓ தீவு என்றும் சீனப் பிரதேசமே

◎ 5-ம் பக்கத் தொடர்

பட்டுள்ள நியாயமான ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வதற்கு சோவியத் தரப்பு மறுத்தது. தற்போதைய சீன—சோவியத் எல்லை சம்பந்தமான உடன்படிக்கைகளை சமத்துவமற்ற உடன்படிக்கைகளாக அங்கீகரிப்பதற்கு அது மறுத்து, ஒரு புதிய சமத்துவமற்ற உடன்படிக்கையை ஏற்பதற்கு சீனவை நிர்ப்பந்தித்து சமத்துவமற்ற உடன்படிக்கைகளினால் வரையறுக்கப்பட்ட எல்லைக் கோட்டைத் தாண்டியதன் மூலம் அது கைப்பற்றிய சீன பிரதேசத்தின் அதனுடைய முற்றுகையை சட்டபூர்வமான உருவில் நிலைநாட்டும் அதனுடைய வீண் முயற்சியில் இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள எல்லைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடிப்படையாக இந்த உடன்படிக்கைகளை அது எடுப்பதற்கு பிடிவாதமாக மறுத்தது. சோவியத் திரிபுவாத துரோகக் கும்பலின் பெரும்தேச தன்னகங்கார, நாடு பிடிக்கும் நிலைப்பாடு சீன தரப்பினால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. இப்படிப்பட்ட நிலைப்பாட்டை சோவியத் தரப்பு பிடிவாதமாக வலியுறுத்தி, அதனுடைய வழிகளைத் திருத்துவதற்கு பிடிவாதமாக மறுத்தால், சீன—சோவியத் எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக முழுமையாக அதனுடைய நிலையை சீன தரப்பு திரும்ப ஆலோசிக்க வேண்டிவரும் என்று சீன தரப்பு தெளிவாக சுட்டிக்காட்டியது.

பேச்சுவார்த்தைகள் மூலம் சீன—சோவியத் எல்லைப் பிரச்சினையை தீர்ப்பதற்கு சோவியத் திரிபுவாத துரோகக் கும்பல் மறுத்தது மாத்திரமல்லாமல், எல்லையின் மரபுநிலையை அது தொடர்ச்சியாக சீர்குலைத்து, எல்லை மோதல்களை உருவாக்கியது. சோவியத் திரிபுவாதிகளினால் சீன—சோவியத் எல்லைப் பேச்சுவார்த்தைகள் சீர்குலைத்து குடைகவிழ்க்கப்பட்ட பின்பு, முக்கியமாக பிறெஷ்னேவும், கொசிஜினும் அதிகாரத்திற்கு வந்தபின்பு, சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பல், சீனவிற்கெதிராக அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் அணிசேரலுக்கான அதனுடைய எதிர்ப் புரட்சித் தேவைகளினால் உந்தப்பட்டு, உள்நாட்டு மக்களின் கவனத்தை திசை திருப்பி, சீன—சோவியத் எல்லைக்கு பெரும் தொகையான படைகளை அனுப்பி, எல்லையின் மரபுநிலையின் அதனுடைய சீர்குலைவை தீவிரப்படுத்தி, இன்னும் அதிக சீன பிரதேசங்களை முற்றுகையிட்டு, ராணுவ ஆத்திரமூட்டல்களைச் செய்து, ரத்தக்களரிச் சம்பவங்களை உண்டாக்கியது. உதாரணத்திற்கு சென்பாஓ தீவை எடுத்துக்கொண்டால், 1967 ஜனவரி 2ம் திகதிக்கும் இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்கும் இடையில் மாத்திரம் இரண்டாண்டுகளுக்கு மேலாக, பனிகாலத்தில், சோவியத் எல்லை காவற்படையினர் சென்பாஓ தீவு பிரதேசத்திற்குள் 16 தடவைகள் ஊடுருவல் செய்தனர். இந்த ஊடுருவல்களின்போது வளமையான காவல்காக்கும் சீன எல்லை காவற்படையினரை அவர்கள் காயப்படுத்தி, சீன ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் கொள்ளையடித்தனர்.

### ஜார் ஏகாதிபத்தியத்தின் அங்கியை அணிந்துள்ள புதிய ஜார்கள்

ராணுவ ஆத்திரமூட்டல்களை நடத்துவதற்கு சீன பிரதேசமான சென்பாஓ தீவிற்குள் சோவியத் திரிபுவாத படைகள் ஊடுருவல் செய்த சமீப சம்பவம், பழைய ரஷ்ய ஜார் ஏகாதிபத்தியத்தின் அங்கியை எடுத்துக் கொண்டு, அதனுடைய சமூக ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக் கொள்கையை கடைப்பிடிக்கும் சோவியத் திரிபுவாத துரோகக் கும்பலின் அசிங்கமான அம்சங்களை மேலும் தெரியப்படுத்துகின்றது. முன் ஒரு காலத்தில் ரஷ்ய ஜார் ஏகாதிபத்தியம் முற்றுகையிட்ட அந்த இடங்களை தங்கள் இடங்களாக அவர்கள் கருதிக்கொண்டு, ரஷ்ய ஜார் ஏகாதிபத்தியம் முற்றுகையிடத்தவறிய இடங்களுக்கான மேலும் உரிமைகளை அவர்கள் கோருகின்றனர். அவர்கள் இன்றைய புதிய ஜார் மன்னர்களாக இருக்கின்றார்கள்.

சீனவின் சுயாதிபத்திய, தேசிய கௌரவத்தை மீறுவதற்கு எவரையும் எள்ளளவும் அனுமதிக்க முடியாது. நாங்கள் தாக்கப்படும்வரை நாம் தாக்கமாட்டோம்; நாம் தாக்கப்பட்டால், நாம் நிச்சயம் பதிலுக்கு தாக்குவோம். சோவியத் திரிபுவாத துரோகக் கும்பல் அதனுடைய வெறித்தனமான பாதையில் விடாப்பிடியாயிருந்துகொண்டு எல்லையில் படைமோதல்களை தூண்டுவதை தொடர்ந்தால், எமது சிறந்த முதல்வர் தலைவர் மாஓவின் போதனைகளைப் பின்பற்றிக் கொண்டிருக்கும் சீன மக்கள் ஊடுருவல் செய்யும் விரோதியை உறுதியாக, முற்றுமுழுதாக, பூரணமாக, அறவே நிச்சயம் அழித்தொழிப்பார்கள்.

குட்டிக் கதை

# அகிம்சாவாதி

யோ. பெ.

ஒரு கோழி முட்டைகளை அடைகாத்துக் கொண்டிருந்தது.

முட்டைக்குள் குஞ்சு உருவாகும் காலம் வந்தது.

முட்டைக்குள் இருந்து குஞ்சுகள் வெளிவரப் போவதையிட்டு கோழி ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒரு முட்டைக்குள் இருந்த கோழிக் குஞ்சு வெளியில் வரத் தெரியாமல் தாய்க் கோழியை அழைத்து, ''அம்மா நான் எப்படி வெளியில் வருவது? கோது என்னை மூடிக் கொண்டிருக்கிறதே?'' என்று கேட்டது.

அதைக் கேட்ட தாய்க் கோழி ''மகனே! கோதை உடைத்துக் கொண்டு தான் நீ வெளிவர வேண்டும். பயப்படாமல் கோதை உடைத்துக் கொண்டு வெளியில் வா'' என்று கூறியது.

முட்டைக்குள் இருந்த கோழிக் குஞ்சு தயங்கியது. ''அம்மா நான் கோதை உடைக்க மாட்டேன். அது பாவம். நான் கோதை உடைத்து இதற்கு இம்சை செய்யமாட்டேன். நான் அகிம்சாவாதி நான் அகிம்சாவாதி. கோது இவ்வளவு காலமும் என்னைப் பாதுகாத்தது. நான் அதை உடைக்க மாட்டேன்'' என்று உறுதியாகக் கூறியது.

தாய்க் கோழிக்கு கோபம் வந்து விட்டது. ''மகனே, இப்போது இந்தக் கோது தான் உன்னை வெளிவர விடாமல் மூடிக் கிடக்கிறது. அது உன் எதிரி. அதை நீ உடைக்கா விட்டால் உனக்கு வாழ்வில்லை'' என்று தாய்க் கோழி உண்மையைக் கூறியது.

குஞ்சு தாயின் சொல்லை நம்பவில்லை. ''அம்மா! நான் அகிம்சையைக் கடைப் பிடிப்பேன். நான் கோதை உடைக்க மாட்டேன். அது தானுக உடையும். அதுவரை காத்திருப்பேன் என்று கூறிவிட்டு முட்டைக்குள்ளே கிடந்தது.

அடுத்த நாள் தாய்க் கோழி அந்த முட்டையைச் சொண்டால் உருட்டிப் பார்த்தது.

கோது தானுக உடையவில்லை.

அந்த முட்டைக்குள் குஞ்சு செத்துக் கிடந்தது.

# முக்கூட்டணி தொழிற் சங்கவாதிகளே இவற்றை மறுக்க முடியுமா?

**1967** டிசம்பர் மாதம் நடைபெற்ற வேலை நிறுத்த போராட்டத்தின் பின் தனியார் துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கை தொழில் மந்திரியால் நியமிக்கப்பட்ட தொழில் கோர்ட் விசாரணையின்போது கெனமன் திரிபுவாதத் துரோகக் கும்பலும், சமசமாஜ வாதிகளும் நாம் குறைந்த சம்பள உயர்வு கோரிக்கையை முன்வைத்து இயக்கத்தை ஆரம்பித்ததாகக் கூறி சீர்குலைவுப் பிரச்சாரதை செய்தனர்.

மாதம் 120/- ரூபா சம்பள உயர்வும், நாணய மதிப்பு குறைக்கப் பட்டதிற்காக 20% சம்பள உயர்வு கொடுக்கப்பட வேண்டும் என முக்கூட்டு முன்னணியை சார்ந்த தொழிற்சங்கங்கள் கோரினர். இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், மாதம் ரூபா 35/- சம்பள உயர்வு வேண்டும் என கோரிக்கை சமர்ப்பித்தது.

தொழிற் கோர்ட் முன்பாக விசாரணை நடந்த பொழுது கூட்டாட்சி தொழிற்சங்கவாதிகள் என்ன கூறினர்.

தொழிற் கோர்ட் விசாரணை தீர்ப்பிலிருந்து சில குறிப்புகளை நாம் இங்கு காட்டுகின்றோம். 'இலக்கம் 369 கொண்ட தொழிற் தகராறு சம்பந்தமாக தொழிற் சங்கங்கள் முன் வைத்த கோரிக்கை (கூட்டாட்சி தலைமையிலுள்ள தொழிற் சங்கங்கள்) நியாய மற்றவையாகவும் ஏற்றுக் கொள்ள கூடியவையல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் சமசமாஜ சம்மேளன பிரதிநிதி திரு. லியனகே இலக்கம் 369 வழக்கில் கேட்கப்பட்டுள்ள கோரிக்கைகள் ''தெளிவான சிந்தனையுள்ள எவனும் கிடைக்குமென முன்வைத்த கோரிக்கை அல்ல எனவும், பேச்சுவார்த்தையின் மூலம் ஏதும் பெற முடியும் எனக் கருதி முன்வைக்கப்பட்ட கோரிக்கை'' என குறிப்பிட்டார்.

மேலும் சமசமாஜ சம்மேளனத்தைச் சேர்ந்த திரு. ஒஸ்வின் பர்ணந்து சாட்சியமளிக்கும்போது அவரிடம் குறுக்கு விசாரணைக் கேள்வி கேட்ட பொழுது ''இலங்கை தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் (டாக்டர் என். எம். பெரேரா) நிதி மந்திரியாக இருந்த காலத்தில் வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக நடைபெற்ற விவாதத்தில் 1964ம் வருடத்தில் இருந்த நிதி நெருக்கடி எந்த விதமான சம்பள உயர்வு கொடுக்கும் நிலையில் இருக்கவில்லை'' எனக் கூறினார்.

இவ் விசாரணையின் பொழுது 1967, டிசம்பரில் நாட்டின் நிதி நிலை எவ்விதத்திலும் சீரடைந்ததாக நிரூபிக்கப் படவில்லை.

இவ் விதம் கூட்டாட்சி தொழிற்சங்கவாதிகள் தங்கள் பிதற்றலினால் தொழிலாளர் மத்தியில் அம்பலப்பட்டிருக்கின்றனர்.

## மில் வைற் சோப் தொழிலாளர் போராட்டம் நீடிக்கின்றது

கடந்த பெப்ரவரி 27ம் திகதி முதல் மில்க் வைற் சோப் தொழிற் சாலை நிர்வாகத்தின் அநீதியான வேலைநீக்கத்தை எதிர்த்து சகல தொழிலாளிர்களும் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். நிர்வாகம் எவ்விதப் பேச்சுவார்த்தைக்கும் வர மறுப்பதினால் மேலும் தொழிலாளர்கள் ஐக்கியப்பட்டு வேலை நிறுத்தத்தை முன் கொண்டு செல்கின்றனர்.

கடந்த 20ம் திகதி தொழிலாளர்கள் தொழிற்சாலை வாசலில் முற்றுகையிட்டிருந்தனர். மூன்று மணித்தியாலங்களுக்குப் பின் பொலிசார் வந்து சகல தொழிலாளர்களையும் பொலிஸ் வானில் ஏற்றி பொலிஸ் நிலையம் கொண்டு சென்று பின் யாழ்ப்பாணம் மஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர். நிர்வாகத்துக்கு இடைஞ்சல் விளைவித்ததாகவும், போக்குவரத்துக்களைத் தடை செய்ததாகவும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது. பின் பத்தொன்பது தொழிலாளிகளையும் தலா 350/- ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிபதி அனுமதி அளித்தார்.

மேற்படி சம்பவத்தின் மூலம் நிர்வாகத்தின் அநாகரீகமான தன்மை மேலும் மக்கள் மத்தியில் மனக்கொதிப்பை உண்டாக்கியுள்ளது. தொழிலாளர்கள் தமது போராட்டத்தில் நம்பிக்கையும், ஐக்கியத்தின் மூலமும் உறுதியாக வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கொண்டு செல்கின்றனர். சகல மக்களும், ஏனைய தொழிற் சங்கங்களும் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவும் அனுதாபமும் கொடுத்து வருகின்றனர். நிர்வாகத்துக்கு எதிராக எடுக்க இருக்கும் நடவடிக்கைகளை இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் செய்து வருகின்றது.

## இந்திய அரசியலில் அண்...

◎ 4-ம் பக்கத் தொடர்

அக்குடிசையைத் தீக்கிரையாக்கினர் நிலப்பிரபுக்கள்.'' அண்ணாதுரையின் பொறுப்பிலிருந்த பொலிஸ் நிலப்பிரபுக்களது சொத்துக்கும் சுகத்துக்கும் பாதுகாப்பு அளித்தது மட்டுமல்லாது, ''சட்டத்தை மீறிய'' ஏழை எளியவரைச் சுட்டது. எல்லோரும் ஓர் குலம் என்பது அண்ணாதுரை கும்பலின் மேடைச் சுலோகம். ஆனால் வர்க்க பேதமும், சுரண்டலும் கொடுமையும் சுலோகங்களால் தீருவனவோ? திராவிட நிலப்பிரபுக்கள் தானே திராவிட ஏழைக் குடியானவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்?

### சாதனை கேவலமானது

சமய—சமுதாய— கலாசார துறைகளில் சிற்சில சீர்திருத்தங்களை அண்ணாதுரை பிரசாரஞ் செய்திருக்கிறார் என்று அப்பாவித்தனமாகச் சிலர் கூறிக்கொள்வர். இது கேவலமான இலட்சியவாதமாகும். புனித குடும்பம் என்ற நூலிலே மார்க்ஸ் எழுதினார்:

''கருத்துக்கள் பழைய சமுதாய அமைப்பு எல்லைகளுக்கு அப்பாற்போக வழி செய்ய மாட்டா; பழைய சமுதாயக் கருத்துக்களுக்கு அப்பாலேயே செல்ல உதவுவன. அரசியல் செயல்முறையுடையவர்களே புதிய கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வரக் கூடியவர்கள்.''

அண்ணாதுரையைப் பொறுத்த அளவில் அவர் கூறிய கருத்துக்கள்கூட புதியன அல்ல; ஆழமானவையுமல்ல. இந்திய மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் ஒருவர் கூறியிருப்பது போல, ''வர்க்க முரண்பாடுகளை மறைத்து, வர்க்க உணர்வை மழுங்கடித்து, வர்க்கப் போராட்டத்தை மறக்கச் செய்து, சுரண்டும் வர்க்கத்துக்குத் துணைநின்ற கைக்கூலி'' அண்ணாதுரை. உதாரணமாக வேலைக்காரி போன்ற ''இலக்கிய''ப் படைப்புக்களிலே மடாதிபதிகள் கண்டிக்கப்படுகின்றனர். ஆனால் கண்டிக்கப்படுவது மடாதிபதிகளின் அந்தரங்க (காமலீலைகள்) வாழ்க்கையாகும். ஆனால் மடங்களது பெருவாரியான நில உடைமை, சொத்து, பதுக்கல் இவைபற்றி ஒரு வார்த்தை தானும் கிடையாது. அது போலவே உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கு மகாராணிகளின் அந்தப்புரக் காமக் கேளிக்கைகள் காரணமாகச் சித்தரிக்கப்படுகின்றன; வரலாறும் பொருளாதாரமும் (பூர்ஷ்வா தத்துவமாயினும்) படித்தவராயிற்றே! உரோமப் பேரரசில் நிலவிய பிரபுக்கள்—அடிமைகள் என்ற கடுமையான வர்க்கப் பாகுபாட்டைப் பற்றியும் முரண்பாட்டைப் பற்றியும் ஒரு குறிப்பு இல்லை! ஜமீந்தார்கள் பற்றி பல ''நாவல்கள்'' எழுதியுள்ளார். அங்கும் அபலைகளைக் கற்பழிக்கும் காமுகர் பற்றியல்லாது ஜமீந்தார் முறை பற்றி மூச்சுப் பேச்சில்லை. இதுதான் அரசியல் அறிஞரின் உலக விளக்கம் போலும்!

மொத்தமாகப் பார்க்கும் போது அண்ணாதுரையின் சாதனை என்ன? அரசியலிலிருந்து கலை இலக்கியம் வரை எடுத்துக் கொண்ட துறை யாவற்றையும் மலினப்படுத்தி, ஆபாசப்படுத்தி நாற்றமெடுக்கச் செய்ததுதான். சீட்டாடிப் பொழுதுபோக்கிய அவர் அரசியல் சூதாட்டத்தில் தற்காலிகமாக வென்றார். ஆனால் சூதும் வாதும் வேதனை தருமல்லவா? இன்று அவரை திராவிட காந்தியாகச் சிலர் தம் சுயநலத்துக்காக விற்று வாழக் கூடும். ஆனால் இறுதி ஆய்விலே, வரலாற்றின் குப்பைத் தொட்டிக்கு உரியவரே அண்ணாதுரை.

## கொள்கையும் நடைமுறையும்

பழைய கம்யூனிஸ்ட் கட்சியின் மிகவும் வெளிப்படையான தவறுகளில் ஒன்று கொள்கைக்கும் நடைமுறைக்கும் சம்பந்தம் இல்லாததே. ஒரு புறம் வேலை செய்பவர்கள், மறு புறம் தத்துவம் பேசுபவர்கள். வேலை செய்பவர்கள் சாதாரணமாக வெகுஜன இயக்கங்களில் மூழ்கி விடுவர், உறுதியான புரட்சிகரக் கொள்கை இல்லாததால் வழி தவறி விடுவர். போராட்டத்தில் எப்படி ஈடுபடுவது, வெகுஜன இயக்கத்திற்குள் சோஷலிஸக் கொள்கைகளை எப்படி பரப்புவது என்பது பற்றி அனுபவம் இல்லாதவர்களாய் இருந்தனர். சுருக்கமாகக் கூறின் இவர்களிடம் தத்துவம் இல்லை.

தத்துவ வாதிகளில் அதிகப்படியானோர் முழு நேர ஊழியர்கள். உண்மையான போராட்டங்களிலிருந்து வெகுவாகப் பிரிந்து வாழ்ந்தனர். பல நாட்களையும் - இரவு பகல்களையும் தமக்குள்ளே விவாதிப்பதிலேயே கழித்தனர், அல்லது வெகுஜன ஊழியனை ஆணையிட்டனர். தமக்கே அனுபவம் இல்லாத வேலைகளை எப்படிச் செய்வதென உத்தரவுகள் பிறப்பித்தனர்.

இந்த விதமாக இயங்குதல் சொல்லுக்கும் செயலுக்கும் இடையே இருக்க வேண்டிய கொள்கைத் தொடர்பை இல்லாமற் செய்து விடும். அனுபவ ரீதியாகக் கற்றறிதல், எமக்கு உள்ள குறைந்த அறிவை சமூகத்தில் செயலாற்றப் பாவித்தல்-வர்க்கப் போராட்டத்தில் பயன் படுத்தல், அதன் அனுபவங்களைப் பாவித்து மறுபடியும் அறிவை வளர்க்க முயல்தல்-திரும்ப மேலும் சிறந்த அறிவுடன் செல்லுதல் ஆகியன புரட்சிகரக் கடமையை நிறைவேற்ற இவை அவசியம்.

—அவுஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி

## வெள்ளவத்தை நெசவாலை பூல் தொழிலாளர் நிரந்தரமாக்கப்பட்டனர்

வெள்ளவத்தை நெசவாலைத் தொழிலாளருக்கு அகில இலங்கை நெசவுத் தொழிலாளர் சங்கம் (சி. டி. யு. எப்.) மீண்டும் ஓர் வெற்றியைப் பெற்றுக் கொடுத்துள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பாக சமசமாஜ சங்கத்தோடு ஆலை முதலாளிகள் செய்துகொண்ட ஓர் ஒப்பந்தத்தினால் பல தொழிலாளர்கள் பூல் மூலம் வேலை கொடுக்கப்படும் தொழிலாளர்களாகவே நடத்தப்பட்டனர். இத் தொழிலாளர்கள் ஏனைய தொழிலாளர்கள் பெறும் சம்பளம் பெற்றபோதிலும் லீவ், போனஸ், அரை மணித்தியாலம் ஓவர்டைம் முதலிய உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர்,

இது சம்பந்தமாக, அகில இலங்கை நெசவுத் தொழிலாளர் சங்கம் நடவடிக்கை எடுத்தது, சகல பூல் தொழிலாளர்களையும் நிரந்தரமாக்க வேண்டும், ஏனைய தொழிலாளர்கள் பெறும் சகல உரிமைகளும் இவர்களுக்கு கொடுக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து நெசவாலை நிர்வாகத்தோடு போராடி வெற்றிபெற்றுள்ளது. சகல பூல் தொழிலாளர்களும் நிரந்தரமாக்கப்பட்டதோடு, ஏனைய தொழிலாளர்கள் பெறும் சகல உரிமைகளையும் இவர்களுக்கு வென்றெடுத்துள்ளது.

இவ் வெற்றி பெரும் வெற்றி மாத்திரமல்லாது, நெசவாலைத் தொழிலாளர்களுக்காக தொடர்ச்சியாக விட்டுக் கொடுக்காது போராடியது அகில இலங்கை நெசவுத் தொழிலாளர் சங்கம் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

# ஆலயப் பிரவேசப் போராட்டத்தில்

# மக்கள் புதிய சாதனைகளை நிலைநாட்டினர்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் ஆலயப் பிரவேசம் பெருமளவு வெற்றி பெற்றுள்ளது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் கடந்த ஆலயப் பிரவேசப் போராட்டத்தின் இறுதி நாளில் கலந்து கொண்டதிலும் பார்க்க அதிகமான மக்கள் மட்டுவில் ஆலயப் பிரவேச முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டது ஒன்றே இந்த இயக்கத்தின் வெற்றியை எடுத்துக் காட்டும்.

சாதி வெறியர்களின் கை ஆட்களாக துரோகத்தனமான அறிக்கைகளை திரிபுவாதிகளும் அவர்களின் கூட்டாளிகளான ஒரு சில தமிழரசு வாதிகள் எனக்கூறிக்கொள்வோரும் அறிக்கைகள்விட்டு தமது துரோகத்தை பகிரங்கப்படுத்தியும், போராட கிளம்பிய மக்களைப் பயமுறுத்தியும், தடுத்து நிறுத்தியும் இவைகள் எதையும் பொருட்படுத்தாது இத் துரோகச் செயல்களை எதிர்த்து ஆயிரக் கணக்கான மக்கள் அதுவும் நூற்றுக்கணக்கான பெண்கள் போராட்டத்தில் கலந்து கொண்டது ஆலயப் பிரவேசப் பேரியக்கம் தொடர்ச்சியாக பலம் பெற்று வீறுநடை போடுவதை எடுத்துக் காட்டியது.

ஒரு சில அரசாங்க அதிகாரிகளும், உள்ளூர் தீய சக்திகளதும் பக்கபலத்துடன் ஆலய பரிபாலகர்கள் ஆலயப் பிரவேசத்தை தடுத்து நிறுத்த போட்ட சதித்திட்டங்கள் அத்தனையும் தோல்வியில் முடிந்தன. ஆலயத்தில் பூசைகள் நிறுத்தப்பட்டு, ஆலயக் கதவுகளைப்பூட்டி ஆலயப் பரிபாலகர்கள் தலைமறைவாகி தமது கையாலாகாத்தனத்தை அம்பலப்படுத்தினர். அதே நேரத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் ஆயிரக் கணக்கில் திரண்டு ஆலய வீதியில் பிரவேசிக்கத் தடையாகவிருந்த முட்கம்பி வேலிகளை அகற்றி உள்வீதிக்கு சென்று மற்றவர்கள் போலவே தாமும் கிணற்றில் தண்ணீர் அள்ளி முகம், கை, கால் கழுவி ஆலய வழிபாடு செய்தனர். இதுவரை சாதிக்கொரு வீதியில் பொங்கிப்படைக்கும் பழைய சம்பிரதாயங்களை தகர்த்தெறிந்து உயர் சமூகத்தவர் பொங்கிப் படைக்கும் இடத்தில் தாமும் பொங்கிப் படைத்து தமது உரிமையை நிலைநாட்டினர்.

அதே நேரத்தில் ஆலயக் கதவுகள் இறுகப் பூட்டியிருந்த நிலையில் ஆலயத்தினுள் சென்று தமது வழிபாட்டுரிமையை நிலைநாட்ட முடியவில்லை. மார்ச் 24ந் தேதி மீண்டும் ஆயிரமாயிரமாக அணிதிரண்டு சாதி நடை முறைகளை தகர்த்து ஆலய வழிபாடு உரிமையை நிலைநாட்ட தீண்டாமையை, சாதி அடக்கு முறையை ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கம் தயாரிப்புகளைச் செய்து வருகிறது.

அதே நேரத்தில் திரும்பவும் ஆலய பாரிபாலகர்களுக்கும், சைவப் பிரமுகர்களுக்கும், அரசாங்க, பொலிஸ் அதிபர்களுக்கும் ஆலயத்தை திறந்துவிட ஆவன செய்யுமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

மத விரோத, மக்கள் விரோத நடவடிக்கைகளை கைவிட்டு ஆலயத்தை சகல மக்களின் வழிபாட்டுக்கும் திறந்து விடுங்கள் என ஆலய முகாமையாளர்களை சகல பகுதி மக்களும் நிர்ப்பந்தித்து வருகிறார்கள்.

## ஒரு லட்சம் தொழிலாளர்...

◎ 1-ம் பக்கத் தொடர்

நடைபெற்ற அரசாங்க ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் போதும் இந்தக் காட்டிக் கொடுப்பையே இவர்கள் திரும்பவும் செய்தனர் என்றார்.

தோழர் [illegible] தொடர்ந்து பேசுகையில், நாம் விடுத்த எச்சரிக்கைகள் யாவும் சரியென இன்று நிரூபிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களுக்கு இன்று கிடைத்தது எட்டே எட்டு சதம்தான். இந்த எட்டு சதம் ஒரு சிகரெட்டு வாங்குவதற்கோ அல்லது ஒரு கோப்பை தேனீர் வாங்குவதற்கோ போதாத பிச்சைக் காசு. எமது சம்பளவுயர்வுக் கோரிக்கையை நீதி நியாயமற்ற முறையில் முற்றுமுழுதாக நிராகரித்ததற்கு எதிராக இன்று நாம் எமது முதலாவது கண்டனத்தைத் தெரிவித்துள்ளோம். போராட்டம் முடிந்து விட்டதென கனவுகாண வேண்டாமென அரசாங்கத்திற்கும் முதலாளிகளுக்கும் இன்று நாம் எச்சரிக்கையை விடுக்கின்றோம். இப் பிரச்சனை சம்பந்தமாக நிகழும் வேலை நிறுத்தங்கள் சட்டவிரோதமெனக் கூறி எம்மைப் பயமுறுத்த முடியாது என்பதையும் ஆணித்தரமாகக் கூறுகின்றோம்.

தனியார் துறையிலுள்ள தொழிலாளர்கள், அரசாங்கத் துறையிலுள்ள தொழிலாளர்கள், நகரங்களிலுள்ள தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், மூளை உழைப்பாளர்கள், சரீர உழைப்பாளர்கள் ஆகியோரைக் கொண்ட முழு தொழிலாளர் வர்க்கத்தையும் ஐக்கியப்படுத்துவதற்கும் பலப்படுத்துவதற்கும் நாம் முயற்சி எடுக்க வேண்டும். அத்தோடு விவசாயிகள், புரட்சிகர புத்திஜீவிகள், தொழிலாளர்கள் ஆகியோர்களது ஐக்கியத்தையும் நாம் கட்டி எழுப்ப வேண்டும். அவர்களுக்கு சரியான அரசியல் தலைமையும், புரட்சிகர கண்ணோட்டத்தையும் நாம் அளிக்க வேண்டும். கெனமன் திரிபுவாத கும்பல், சமசமாஜ தலைமை ஆகியோரது துரோகத்தனமான தலைமையை நிராகரிக்குமாறு நாம் அவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்றார்.

மேலும் அவர், ஏகாதிபத்திய வாதிகள், நிலபிரபுக்கள், முதலாளிகள் ஆகியோரது நலன்களைப் பாதுகாப்பதற்கு பெரும் செலவில் பேணப்படும் அரசு இயந்திரத்தை தொழிலாளர் வர்க்கம், விவசாயிகள், புரட்சிகர புத்திஜீவிகள் ஆகியோரது புரட்சிகர ஐக்கியத்தினால் ஸ்தம்பிக்கச் செய்வதோடு, அதனை முறியடிக்கவும் முடியும் என்ற நம்பிக்கையை நாம் அவர்களுக்குப் புகட்ட வேண்டும். ஏகாதிபத்திய, முதலாளித்துவ, பொருளாதார கட்டுக் கோப்பிற்குள் தமது உழைப்பிற்கு உயர்ந்த சம்பளத்தைப் பெற நடாத்தும் பொருளாதாரப் போராட்டங்களுக்குப் பதிலாக சுரண்டும் முறையையே ஒழிப்பதற்கான அரசியல் போராட்டம் நடாத்தப்பட வேண்டுமென்பதை நாம் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டும். இந்தக் கடமையை பங்கலோட்டுத்தனமான பாராளுமன்ற பாதையின் மூலம் இன்றுவரை செய்யப்படவுமில்லை. இனிமேல் ஒருபோதுமே செய்து முடிக்கப் போவதுமில்லை. புரட்சிகர மார்க்கத்தின் மூலமே இதனை நிறைவேற்ற முடியும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எம்மை நாம் அர்ப்பணிப்போமாக எனக் கூறி முடித்தார்.

இக் கூட்டத்தில் இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் தோழர் வொட்சன் பெர்னாந்து, தோழர் எஸ். டி. பண்டாரநாயக்கா, எம். பி. மற்றும் பலரும் பேசினார்கள்.

---

## தீண்டாமைக்கும் சாதி-அடக்குமுறைக்கும் எதிரான மக்கள் போராட்டத்தை ஆதரிக்கும்

# கலை நிகழ்ச்சிகள்

**குடி நிலம்:**

(சமூக நாடகம்)

**சங்காரம்:**

(வடமோடி நாடகம்)

**கவியரங்கு:**

**இன்னிசைப் பாடல்கள்:**

**இடம்: லும்பினி மண்டபம்,**
**ஹவலக் டவுண்**

**காலம்: 1-4-69, பிற்பகல் 5-30மணி**

**பிரவேசம் இலவசம்**

தீண்டாமையையும் - சாதி அடக்கு முறையையும் ஒழிப்பதற்கான வெகுஜன இயக்கம்.

---

## தோழர் தாகின் தான் துன்னுடைய மரணத்திற்கு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அனுதாபம்

பர்மா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் தாகின் தான் துன் அவர்களது மரணம்பற்றி, பர்மா கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அனுப்பிய அனுதாபச் செய்தி.

பர்மா கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி,
தோழர்கள் தாகின் ஸின்,
தாகின் பா தெய்ன் தின் ஆகியோருக்கு,

பர்மா கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியின் தலைவரும், பர்மாவின் சகல தேசிய இனங்களின் மகத்தான தலைவருமான தோழர் தாகின் தான் துன் ஒரு தியாகியின் மரணம் எய்தினர் என்பதை அறிய அதிர்ச்சியும், ஆழமான துன்பமும் அடைந்தோம். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

தோழர் தாகின் தான் துன் அவர்களுடைய வாழ்க்கை ஒரு புரட்சிவாதியினுடைய வாழ்க்கை. பர்மாவிலுள்ள ஏகாதிபத்திய சார்பு பிற்போக்கு ஆட்சியைத் தூக்கி எறிவதற்கான், தேசத்திலுள்ள சகல தேசிய இனங்களின் மக்களதும், பாட்டாளி வர்க்கத்தினதும் பூரண விடுதலைக்கான வீரம்செறிந்த ஒரு போராட்ட வாழ்க்கையாக அவருடைய வாழ்க்கை இருக்கின்றது. அத்துடன் பர்மாவில் மார்க்ஸிஸம் — லெனினிஸத்தின் வெற்றிக்கான தீரமான போராட்டத்தின் ஒரு வாழ்க்கையாக அவருடைய வாழ்க்கை இருக்கின்றது.

தோழர் தாகின் தான் துன் அவர்கள் அமெரிக்க, பிரித்தானிய ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகளையும் அவர்களுடைய வேட்டை நாய்களையும் உறுதியுடன் எதிர்த்தார். நீவின்னுடைய ராணுவ குழுவின் சர்வாதிகார ஆட்சிக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான ஒரு நீண்டகால ஆயுதம் தாங்கிய போராட்டத்தை சுயசார்பின் அடிப்படையில் நடத்துவதில் பர்மிய மக்களுக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அவர் தலைமை தாங்கினர். அவர் சோவியத் திரிபுவாதத் துரோகக் கும்பலை உறுதியுடன் எதிர்த்து, தமது கட்சிக்குள்ளும் வெளியிலுள்ள திரிபுவாதிகளுக்கு எதிராக ஒரு உறுதியான போராட்டத்தை நடத்தியதுடன், பர்மிய புரட்சியின் ஸ்தூல நடைமுறையுடன் மார்க்ஸிஸம்—லெனினிஸத்தின் சர்வவியாபக உண்மையை இணைப்பதற்கு அவர் பாடுபட்டார். பர்மாவிலும், உலகத்திலும் புரட்சிக்கு அவர் முக்கிய பங்குகளைச் செலுத்தியுள்ளார்.

தோழர் தாகின் தான் துன் அவர்களுடைய மரணம் பர்மிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாத்திரம் ஒரு பேரிழப்பாக மட்டுமல்ல, பர்மிய மக்களுக்கும், சர்வதேசிய கம்யூனிஸ இயக்கத்துக்கும்கூட ஒரு பேரிழப்பாக இருக்கின்றது. தோழர் தாகின் தான் துன் எம்மை விட்டகன்று விட்டார். ஆனல் அவருடைய புரட்சி உணர்வு பர்மிய மக்களுடைய உள்ளங்களிலும், சகல உண்மையான மார்க்ஸிஸ்ட்—லெனினிஸ்டுகளுடைய உள்ளங்களிலும் என்றென்றும் நிலைத்திருக்கும். பர்மா கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், மக்கள் சேனையின் போராளிகளும், பர்மிய பாட்டாளி வர்க்கமும், சகல தேசிய இனங்களின் மக்களும் தோழர் தாகின் தான் துன் அவர்களுடைய புரட்சி உணர்வை மரபுமுறையாகப் பெற்று, அதை முன்கொண்டு சென்று, தோழர்கள் தாகின் ஸின், தாகின் பா தெய்ன் தின்னின் தலைமையின் கீழ், ''யுத்தத்தை வெல்லுவது, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது'' என்ற புரட்சி மார்க்கத்தின் வழிகாட்டுதலுடன், பர்மிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியைச் சுற்றி நெருக்கமாக அணிதிரள்வார்கள் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம். தமது துக்கத்தை சக்தியாக மாற்றிக்கொண்டு, பர்மிய புரட்சியின் இறுதி வெற்றியை ஈட்டுவதற்கு விரோதிமீது பலமான தாக்குதலைக் கொடுப்பார்கள் என்றும் நம்புகிறோம்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின்
மத்திய கமிட்டி.

16, மார்ச் 1969

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'' அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2